பக்கங்கள்-16 | 17.ஐப்பசி.2021 | விலை-30.00





# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -360

## இனவாத அரசாங்கத்தோடு மீண்டும் கைகோர்த்த இந்தியா - சீனாவை மிரட்ட இராஜதந்திர சந்திப்பு!



## ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் சந்தேகநபர் ரிசாட் பிணையில் விடுதலை - நடக்கபோவது என்ன?





## வடகிழக்கு பிரிவினைவாதத்திற்கு வித்திட்டவர் கருணாஅம்மான் நான் இல்லை - த.ம.வி.கட்சியின் தலைவர் பிள்ளையான்

சிறப்பு நேர்காணல்





# இனவாத அரசாங்கத்தோடு மீண்டும் கைகோர்த்த இந்தியா – சீனாவை மிரட்ட இராஜதந்திர சந்திப்பு!

இன்றைய சமகால அரசியல் பார்வையில் இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி இலங்கைக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருப்பது என்பது தற்போதைய காலகட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. இந்தியா இலங்கையை நட்புறவு நாடாக மாற்றிக்கொண்டதனை அடுத்து தொடர்ந்தும் தனது உதவிகளை செய்து வருகின்றது. இருப்பினும் தற்பொழுது சீனாவுடனான உறவு என்பது இந்தியாவை பாரியதொரு இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளிவிட்டது. ஆகவே தான் சுப்பிரமணியன் சுவாமிகளுடைய இலங்கைக்கான விஜயம் இராஜதந்திர ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகவே கருதப்படுகின்றது. போருக்கு பின்னரான சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறிப்பாக சீனாவை மையமாக கொண்டு நகர்த்தப்பட்டதால் இந்தியாவினுடைய பொருளாதாரத்திற்கும் இலங்கையுடனான நட்புறவுக்கும் பெரும் குந்தகத்தை ஏற்படுத்திய விடயமாகும்.

ஆகவே மகிந்த ராஜபக்சவினுடைய அணுகுமுறை என்பது மீளவும் இந்திய அரசு தன்னை சுயபரிசோதனை செய்து கொண்டு தற்பொழுது சுப்பிரமணியன் சுவாமி மூலம் களமிறங்கியுள்ளது. சுப்பிரமணியன் சுவாமி என்பவர் இந்தியாவின் "ரோ" புலனாய்வு பல தசாப்தங்களாக பல்வேறு நாடுகளுக்கும் தனது அடையாளம் என்ன என்பதை காண்பித்தவர். இவரின் செயற்பாடுகள் என்பது ஆட்சி மாற்றங்கள் ஆட்சி கவிழ்ப்பு வர்த்தக ரீதியான உடன்பாடுகள் போன்றவையும் இவரின் செயற்பாடுகளில் ஒன்று. அத்தகைய நிலைப்பாட்டின் காரணமாகவே காலத்துக்கு காலம் அரசியல் மாற்றங்கள் ஏற்படுகின்ற பொழுதெல்லாம் சுப்பிரமணியன் சுவாமிகள் இலங்கைக்கு விஜயம் செய்வது என்பது முக்கியமான விடயமாக கருதப்படுகின்றது. இந்த சூழலில் இலங்கை நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை விஷேடமாக சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அதேநேரம் மகிந்த ராஜபக்ச இருக்கும் வரையில் இலங்கையின் அரசியலை தொடர்ந்தும் முன்னெடுக்கமுடியும் என்ற கருத்தையும் சுப்பிரமணியன் சுவாமி அவர்கள் தெரிவித்திருந்தார். அரசியல் கால நீரோட்டத்திற்கு ஏற்ப தமது புலனாய்வு கட்டமைப்புக்களை பலப்படுத்துவதற்காகவே இம்முறை சுப்பிரமணியன் சுவாமி என்பவரை அழைத்திருக்கின்றது எனலாம்.

குறிப்பாக சீன அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து இலங்கையை வேறுபடுத்துவது என்பதும் போர்ட்சிற்றி அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றால் இந்தியாவிற்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள் எவ்வாறு என்றும் ஆராயப்பட்ட அதேநேரம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பூகோள அரசியல் என்பது தமது சுயநல இலாபத்திற்காகவே இயங்கிவருகின்றது எனலாம். அத்தகைய சூழல்களை மாற்றும் திறன் கொண்டதாகவே இந்திய அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தற்பொழுது மாற்றியமைத்துள்ளது. சீனா ஆயுத பலத்தாலும் அணுஆயுத பலத்தாலும் கொரானா வைரஸ் என்ற கொடிய நோயினாலும் உலகத்தை கட்டுப்படுத்தலாம் என்று தனது அதிதீவிர நிலைப்பாட்டை நகர்த்திவருகின்றது. இவற்றை ஆரம்பத்திலிருந்தே தகர்த்தெறிய வேண்டும் என்பதே இந்தியாவின் முயற்சியாகவும் இருந்துவந்தது. ஆனால் கோட்டபாய ராஜபக்சவினுடைய ஆட்சிக்காலத்தில் இந்தியா நினைத்தது போன்று தனது செயற்பாடுகளை இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளது. சில பல காரணங்கள் தான் இதற்கு காரணம் என்று குறிப்பிட்டாலும் சீனாவின் இராஜதந்திர போர் நடவடிக்கைகளை இலங்கையை மையமாக கொண்டு நடத்துவதற்கே சீனா இலங்கையில் காலூன்றி இருக்கின்றது என்பதை இந்தியாவின் ரோ தெளிவாக தெரிவித்துள்ளது. இத்தகைய ஒரு சூழலில் தான் சுப்பிரமணியன் சுவாமி அவர்கள் நேரடியாக நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் இராஜதந்திரிகளை சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

குறிப்பாக இந்தியாவின் போர் கப்பல்கள், நீர்முழ்கிகள் இலங்கை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. காலத்துக்கு காலம் அரசியல் மாற்றங்களில் இந்தியா சந்தித்த பாரிய பின்னடைவு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. திட்டமிட்டவாறு இந்திய அரசு இராமர் பாலத்தை அமைப்பதன் ஊடாக தனது புலனாய்வு கட்டமைப்புக்களையும் தரைவழிப்பாதை தொடர்பிலும் சிந்தித்து அதற்கான வியூகங்களை அமைப்பதற்கும் திடசங்கர்ப்பம் பூண்டிருந்த நிலையில் இந்தியாவின் அனைத்து இராஜதந்திர நகர்வுகளும் சீனாவின் உள்நுழைவினால் பாரிய பின்னடைவை சந்திக்க நேர்ந்தது. இந்தியாவின் இராணுவ கட்டமைப்பானது கடல், தரை, வான் போன்றவற்றிலும் விட தரைப்படை என்பது உலக வரலாற்றில் நான்காவது இடத்தில் உள்ளது.

தற்போதைய சூழலில் கெமிக்கல் ஆயுதங்களை கொண்டே நாடுகள் ஒவ்வொன்றும் தாக்குதலை நடத்துவதற்கு தயாராகிவருகின்றன. இந்த நிலையில் இந்தியாவால் சர்வதேச நாடுகளை சமாளிக்கும் அளவிற்கு அல்லது தனது படை நகர்வினை மேற்கொள்ளும் அளவிற்கு இலங்கை இந்திய இராஜதந்திர முறைமை வலுப்படுத்தும் அளவிற்கு செயற்படுமா என்பது கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது. இருந்தாலும் இந்தியாவை பகைத்துக்கொண்டு அரசியல் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளுமாக இருந்தால் மீளவும் இலங்கையில் ஆயுதப்போராட்டம் ஆரம்பிப்பதற்கான அடிக்கல்லை இந்தியா அரசே நிலைநிறுத்தும். குறிப்பாக ஆர்.எஸ்.எஸ் போன்ற மதவாதிகள் ஏற்கனவே இலங்கையில் மதவாத நிலைமைகளை தோற்றுவித்துள்ளார்கள். அதனுடைய விளைவு என்பது கிறிஸ்தவ இந்து முஸ்லிம் பிரச்சனைகளாக தற்பொழுது



உரு எடுத்துள்ளது. இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை துண்டித்து சீன வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுவருவதன் ஊடாக இலங்கையுடனான பல இராஜதந்திர ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்படு மளவிற்கு நிலைமை மோசமடையலாம். இந்தியா தனது சுயலாப அரசியலுக்காக ஆயுதம் ஏந்திய போராளிகளை பயன்படுத்தியது அனைவரும் அறிந்த உண்மை.

தற்பொழுதும் ஆயுத கட்சிகளை தன்வசப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துடன் இணைந்து இந்தியா செயற்படுத்திவருகின்றது. இந்தியாவின் ஒருசில பகுதிகளில் ஆயுத பயிற்சிகளும் வழங்கப்பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அது மட்டுமன்றி இலங்கையில் ஐஎஸ்.ஐஎஸ் தீவிரவாத தாக்குதலுக்கான சில செயற்திட்டங்களும் தீவிரவாதிகள் இலங்கையில் இருந்து தப்பி இந்தியாவிற்கும் மறைமுகமாக வாழ்வதற்கு இந்தியாவின் புலனாய்வு கட்டமைப்பு வலிவகுத்ததாகவும் கூறப்படுகின்றது. இது எல்லாவற்றிற்கும் முக்கிய காரணம் என்னவென்றால் சீன அரசாங்கம் இலங்கையில் கால் பதித்திருப்பதேயாகும். இந்தியாவின் கரையோர பாதுகாப்பு என்பது இலங்கைக்கு மிக அத்தியாவசியமானதொன்று.

குறிப்பாக இந்தியாவின் கரையோர பாதுகாப்பு தற்பொழுது பறிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் இராணுவம் தாங்கிய நீர்மூழ்கி கப்பல்கள் வந்து போகின்றன. அதைவிடவும் 2000க்கு மேற்பட்ட சீன புலனாய்வாளர்கள் இலங்கையில் பணிபுரிகின்றோம் என்ற வகையிலும் இவர்கள் சீனாவிற்கான புலனாய்வு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார்கள். சுப்பிரமணியன் சுவாமியை பொருத்தவரையில் பல நாடுகளுடன் சதிப்புரட்சியை ஏற்படுத்தியதுடன் இந்தியா தனது சுயபாதுகாப்பை பரிசீலனை செய்துகொள்வதற்காக இவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுப்பது வழமையானதொன்று. இருப்பினும் பூகோள ரீதியிலான பிரச்சனைகள் தற்பொழுது தலைதூக்கியுள்ளது. அதனை சரி செய்வதற்கு தற்போதைய பைசர் தாக்குதல்களை எதிர்கொண்டால் மாத்திரமே உலகளாவிய ரீதியில் இனி எந்தவொரு நாடும் பிரஸ்தாபிக்க முடியும்.

எனவே பைசர் எதிர்ப்பு சமரை எவ்வாறு சமாளிப்பது அதற்கான திட்ட வரைபுகள் என்ன என்பது பற்றியும் இலங்கையுடன் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பதற்கும் தற்பொழுது திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது. சீனாவினுடைய இலங்கையின் இருப்பு என்பது 100 வருடங்களை இலக்காக கொண்டது. வர்த்தக ரீதியாக தமது நிலைப்பாடுகளை பலப்படுத்துவது என கூறிக்கொண்டு ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனது போர் நடவடிக்கைகளை பலப்படுத்துகின்ற செயற்பாடுகளில் சீனா களமிறங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சுப்பிரமணியன் சுவாமியை பொருத்தவரை இலங்கை அரசாங்கத்துடன் நீண்ட காலமாக தனது நட்புறவை வளர்த்துக்கொண்டுவருகின்றார். அவர் இலங்கைக்கு விஜயம் செய்யும் பொழுதெல்லாம் இலங்கையில் ஒரு மாற்றம் நிகழ்வது வழமையாதொன்று. ஆனால் இம்முறை அரசாங்கத்தினுடைய ஆட்சி மாற்றத்தில் சீனாவுடனான நெருங்கிய தொடர்பு இருப்பதாக நிலைமைகள் சுட்டிக்காட்டிய பொழுதும் இந்திய அரசாங்கமானது தனது மத்திய புலனாய்வினால் எவ்வாறெல்லாம் இலங்கையுடன் பேசி அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று இனவாதம், மதவாதம், தேசியவாதம் போன்ற பிரச்சனைகளை மீண்டும்தலைதூக்குவதற்கு இவர்களின் செயற்பாடுகள் முக்கியமானதொன்றாக அமைந்துள்ளது. ஆகவே சுப்பிரமணியன் சுவாமியின் இலங்கைக்கான நரித்தந்திரமான விஜயம் சீனாவை மிரட்டுகின்ற ஒரு இராஜதந்திர நகர்வாகவே பார்க்கப்படுகின்றது.

**நெற்றிபொறியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## களை கட்டப்போகிறதா மாகாணசபை தேர்தல்

இலங்கையில் மாகாணசபை தேர்தல் இடம்பெற வேண்டும் என்பது இந்தியாவினுடைய நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டை பொறுத்தவரையில் தனது அரசியல் நலம் சார்ந்ததாகவே இந்தியா தற்பொழுது 13ஆம் திருத்த சட்டத்தில் ஒரு சில பகுதிகளை அமுல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவந்தது. மாகாணசபை அதிகாரங்கள் என்பது வடகிழக்கிலும் சரி ஏனைய பகுதிகளிலும் சரி பொலிஸ் காணி அதிகாரங்கள் பயணளிக்கப் பட வேண்டும் என்று உள்ளது.

ஆனால் பொலிஸ் அதிகார காணி என்பது மத்திய அரசாங்கத்தின் கீழே உள்ளது. இதில் குறிப்பாக ஆளுநர் நியமனம் என்பது அரசாங்கத்தின் எடுபிடிகளாக செயற்படுபவர்களுக்கே வழங்கப்படுகின்றது. தற்போதைய சூழலில் அரசாங்கம் சுயேட்சை குழுக்கள் பலவற்றை களமிறங்கியுள்ளது. இந்த செயற்கை குழுக்களின் ஊடாக தமிழ் கட்சிகளுக்கு கிடைக்கக்கூடிய வாக்குகளை மேற்கொண்டாலும் தந்திரோபாயங்களை மேற்கொண்டு வடக்கிலும் கிழக்கிலும் ஏனைய மாவட்டங்களிலும் மகிந்த ராஜபக்சவின் குடும்பம் ஆட்சியை கைப்பற்றுவதற்கு தற்பொழுதிருந்தே திட்டங்களை வகுத்திருக்கின்றது. தேர்தல் ஒன்றை நடத்துவதாக இருந்தால் அதற்கான பணம் அவசியமானதொன்று. 25 மாவட்டங்களிலும் எவ்வாறு அதனை செயற்படுத்துவது என்ற கேள்வி தற்பொழுதுள்ளது காரணம் கொரோனா வைரசினுடைய தாக்கமாகும். ஒருவேளை இந்தியா அதற்கான பண உதவிகளை வழங்கக்கூடும். இலங்கையினுள் தொடர்ந்தும் தனது அரசியலை நிலைநாட்டுவதற்கு 13ஆவது திருத்தச்சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்தினால் மட்டுமே இந்தியா தனக்கான ஒரு இடத்தை தக்க வைத்துக்கொள்ள முடியும். தமிழினத்தை பொறுத்த வரையில் இந்தியாவோ சீனாவோ எமக்கான ஒரு தீர்வை பெற்றுத் தரப்போவதில்லை இலங்கையில் வடகிழக்கை தவிர்ந்த எந்த பிரதேசத்தையும் சீன அரசாங்கம் கைப்பற்றினாலும் தமிழ் மக்கள் அதுகுறித்து அச்சம் கொள்ளத்தேவையில்லை. அதிலும் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும் ஒரு செயல் திட்டமாக அமையப்பெறும். ஆகவே மாகாணசபை இடம்பெற்றால் அதற்கு முதலமைச்சர் யார் என்ற போட்டி அல்லது யாரை நிலை நிறுத்துகின்ற உத்திகள் தற்பொழுது வகுக்கப்பட்டுவருகின்றது. ஆகவே தமிழ் அரசியல் தலைமைகள் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே மாகாண சபை ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்பது இன்றைய அரசியல் நிலைப்பாடு.

# 164 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

போக்குவரத்து வாகனங்கள் அல்லது படைகள் நெருங்குவதற்குச் சற்று முன்னர் பொருத்தும் சந்தர்ப்பங்கள் கணிசமான அளவு குறைவாகும். கண்ணி வைப்பதற்கு மிகவும் பொருத்தமான இடமாகப் பின்வருவன கருதப்படுகின்றன் அ) மக்கள் வாழ் விடங்களுக்கு முன்னாலுள்ள வீதிப்பகுதி (வெளியேறும் உட்செல்லும் வீதி). ஆ) பிரதான பாதைகளுக்கான வளைவுகளும் அவற்றுக்குச் செல்கின்ற பதைகளும். ) முந்திச்செல்ல, சுற்றிச்செல்ல முடியாத அல்லது கடினமான பாதைகள், ஈ) திருத்தப்படவேண்டிய சேதப்பட்ட பாதைகள் (எடுத்துக் காட்டாக, நடைபாதைப் பக்கங்களில் குழிகள், வாகனம் கடந்து செல்கின்ற பகுதிகளில் பாரிய கிடங்குகள்), உ) கிணறுகள், நீர்வழங்கல் நிலைகள் போன்றவற்றுக்கான பாதைகள். ஊ) ஆற்றுக்கடவை, துறை, உயரங்குறைந்த பாதுகாக்கப்படாத பாலங்கள் போன்றன.

கண்ணிவெடிகள், சிதறல் குண்டுகள் போன்றவற்றைப் பொருத்துகின்ற ஒழுங்கும் திட்டமும் வெவ்வேறு வகையானதாக இருக்கின்றன. தரையில் அவை பொருத்தப்படும் ஆழம் கிட்டத்தட்ட 5 - 100 செ.மீ வரையாக இருக்கின்றது. கண்ணிகளும் சிதறல் குண்டுகளும் உருமறைக்கப்படுகின்றன. ஆனால், இடையிடையே நிபுணத்துவமற்ற முறையிலும் உருமறைக்கப்படுகின்றன.

### நாசகார வேலையும் பயங்கரவாதமும்

கண்ணிச் சமரைவிட, சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளில் இவை மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. நாசகாரவேலையின் பிரதான இலக்குகளாக தொடர்புக் கடத்திகள், மின்கடத்திக் கம்பிகள், சகல வகைப் போக்குவரத்துக்கள், அரசஅலுவலகங்கள், சில இயந்திரத் தொழிற்சாலைகள் (பிராந்தியப் பொருளாதாரத்திற்கான ஊற்று) போன்றன விளங்குகின்றன. அரச படைகளின் அதிகாரிகள், பாதுகாப்பு அமைப்புக்களினதும் சட்ட அமுலாக்கல் பிரிவினதும் பணியாளர்கள், அதிகார அமைப்புக்களின் பணியாளர்கள், அதிகாரத் தரப்புடன் தொடர்புடைய அல்லது நடுநிலைமைக்காகப் பாடுபடுகின்ற அறிவுஜீவிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் போன்றவர்களுக் கெதிராகப் பயங்கரவாதச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

நாசவேலையிலும் பயங்கரவாதச் செயற்பாட்டிலும் சிறப்பாகத் தயார்ப்படுத்தப்பட்ட வெவ்வேறு எண்ணிக்கை கொண்ட குழுக்கள்



(அநேகமாக, 15 - 30 பேர்) ஈடுபடுகின்றன. வழக்கமாக, இவ்வாறான குழுக்களும் உபகுழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன. அவதானிப்பு (நாசவேலை இலக்கை வேவு பார்த்தல், பயங்கரவாத இலக்கைத் தொடர்தல்), அடக்குதல் (இலக்கின் காவலை அழித்தல், பயங்கரவாதத்தை மேற்கொள்ளல்), பொறியியல் (தகர்ப்பு, தீவைப்பு ஆகியனவற்றை மேற்கொள்ளல் அல்லது பிற வழியில் நாச வேலை செய்தல்), காப்பளித்தல் (தொடர்புக் கடத்திகளை அழித்தல், உதவி ப்படைகளுடன் அல்லது சட்ட அமுலாக்கல் படையினருடன் சமரிடல்). வழக்கமாக இந்த உபகுழு உருமறைக்கப்பட்ட மறைப்பிடங்களில் தங்கியிருக்கின்றதுடன், தன்னியக்கச் சுடுகலன்கள், இயந்திரச் சுடுகலன்கள், எறிகணை செலுத்திகள் போன்ற ஆயுதங்களையும் கொண்டிருக்கின்றது.

பயங்கரவாத நடவடிக்கையைப் பின்வரும் முறைகளில் மேற்கொள்ளலாம். பதுங்கியிருந்தவாறு இலக்கு வசிக்கின்ற அல்லது வேலை செய்கின்ற இடத்திற்குச் சுடுதல், நகர்கின்ற வாகனத்திலிருந்து சுடுதல், இலக்கின் சொந்த (பணிநிமித்த) வாகனத்தைத் தகர்த்தல், பணியாற்றுமிடத்தை அல்லது வீட்டைத் தகர்த்தல், நஞ்சூட்டல் பதார்த்தங்களைப் பயன்படுத்தல், விசாரணை செய்யும் நோக்கில், பணம் பெறும் நோக்கில், பரிமாற்றம் அல்லது கொல்லும் நோக்கில் இலக்கைக் கடத்துதல் போன்றன. கடத்திக் கொல்லும் சந்தர்ப்பங்களில், இலக்கு கடின துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் படுவதுடன், அதன் சுவடுகள் பிண த்தில் தெரியவும் வேண்டும். போராளிகளின் கருத்துப்படி, இவை எதிரிகளைச் சோர்வடையச் செய்கின்றதுடன், கொள்கைத் தளர்வானவர்களைப் பீதியடையவும் வைக்கின்றது.

கெரில்லாவினதும் கிளர்ச்சியினதும் சாராம்சம் ஒரு போராட்ட முறை

மூலோபாய அளவிடையில் குறுஞ்சமரின் பூரண வளர்ச்சிச் சுற்று, ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்ட மூன்று கட்டங்களைக் கொண்டிருக்கின்றது. தற்காப்பு (எதிரியின் முன்னேற்றத் தாக்குதல்) போராடுகின்ற தரப்பினர்களின் இயக்கச் (இயங்கல்) சமநிலை எதிர்ப்பியக்கப் படையின் மூலோபாய முன்னேறித் தாக்குதல் இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில், இக்கட்டங்களின் இவ்வாறான தொடர்ச்சிப்போக்கு போராட்ட முறையில் இன்றியமையாத அடிப்படையாக விளங்குகின்றது.

கடந்துவிட்ட கட்டங்களுக்குள் தாவுதல் அல்லது அவசரமாகப் புகுந்துகொள்ளல் அனுமதிக்கப்படுவதில்லை. ஒப்பீட்டளவில் குறை ந்த எண்ணிக்கை கொண்ட கிளர்ச்சிப் படையை ஒடுக்குவது நிரந்தர இராணுவத்தால் சாத்தியமில்லை என்ற எண்ணத்தால் தோற்றுவிக்கப்பட்ட, தாக்கப்பட முடியாதென்ற மாயை கிளர்ச்சிப்படையைத் தேவையற்ற முன்னேறித் தாக்குதல் நடவடிக்கைகள், பொருத்தமற்ற படைக் குவிப்பு, சமர் நடவடிக்கைப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்குத் தூண்டுகின்றது. குறிப்பாக இதனாலேயே கிளர்ச்சியாளர்கள் சகல இடங்களிலும் மிகப் பாரதூரமான விளைவுகளைச் சந்தித்திருக்கின்றார்கள். கூடுதலான சமயங்களில், முன்னரேயே ஆபத்து ஏற்படுவதற்கான காரணம் யாதெனில் வெளிப்புற அறிகுறிகளின் எண்ணிக்கையை (வீரர்களின் எண்ணிக்கை வளர்ச்சி, சந்தித்த சமர் வெற்றிகள், கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அதிகரித்தல்) அவர்கள் புதியதரத்தை எட்டியதன் அறிகுறிகளாகக் கணித்ததாகும்.

புரட்சிவாதக் கிளர்ச்சி அமைப்பு அல்லது தேசிய விடுதலை அமைப்பிலிருந்து குறுஞ்சமர் தோற்றம்

**தொடர்வான்...**

**நெற்றிபொறியன்**

# வடகிழக்கு பிரிவினைவாதத்திற்கு வித்திட்டவர் கருணா அம்மான் நான் இல்லை – சி.சந்திரகாந்தன்(பிள்ளையான்)

**முன்னாள் முதலமைச்சர் ,பாராளுமன்ற உறுப்பினர்,அபிவிருத்தி குழு தலைவர்,தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சியின் தலைவருமான சிவனேசன்துறை சந்திரகாந்தன்(பிள்ளையான்) அவர்ளுடனான சிறப்பு நேர்காணல்**



கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையில் பல விடயங்கள் பற்றி பேசலாம் என நினைக்கின்றேன். குறிப்பாக உங்களுடைய சிறைச்சாலை வாழ்க்கையினுடைய அனுபவம் எப்படியிருந்தது என்பதைப் பற்றி சற்று கூறுங்கள்?

பதில் : தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கும் தெரியும் சிறைச்சாலை என்றால் என்ன என்று. என்னைப் பொறுத்தவரையில் உலகில் சிறைச்சாலை என்பது கடினமான வாழ்க்கை அதிலும் இலங்கை சிறைச்சாலை என்பது இன்னும் கடினம். காரணம் என்னவென்றால் மிகவும் அடிமட்ட வசதிகளுடன் இயங்குகின்ற சிறைச்சாலை தான் எமது நாட்டிலே இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட சிறைச்சாலையை தவிர அடுத்து எல்லாமே பிரிட்டிஸ் காலத்தில் அமைக்கப்பட்ட சிறைச்சாலைகளாகவே இருக்கின்றது. அந்த வகையிலே மிக நெறிசலான புழுதியும் மூட்டை பூச்சிகளும் நிறைந்த ஒரு கடுமையான தண்டனை வழங்குகின்ற ஒரு நிலையமாக இது இருக்கின்றது. அந்த அடிப்படையில் நாங்கள் தண்டனை இல்லாமல் பயங்காரவாத தடைச்சட்டத்தின் காரணமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தோம்.

அந்தடிப் படையில் சிறைச்சாலை வாழ்க்கை எல்லாரைப்போலவும் கடினமான வாழ்க்கை தான் இருந்தாலும் எங்க ளுடைய வாழ்க்கையில் அரசியல் ரீதியாக பலிவாங்கப்பட்டோம் என்ற அடிப்படையிலே இதிலிருந்து மீண்டு வரவேண்டும். நாம் யார் என்பதை இந்த உலகத்திற்கு சொல்ல வேண்டும் என்று பொறுமையாக இருந்து அந்த கடுமையான சூழ்நிலையை கடந்து .ன்று மக்களுடைய செல்வாக்கு காரணமாக மக்களின் மீது வைத்திருந்த நம்பிக்கை காரணமாக அதிகூடிய வாக்குகளை பெற்று வருவதற்கும் ஒரு சந்தர்ப்பமாக அது அமைந்திருந்தது.

கேள்வி : நீங்கள் சிறைச்சாலையில் இருக்கின்ற பொழுது பாராளுமன்ற உறுப்பினராக உண்மையில் இலங்கையில் ஒரு வரலாற்று சான்றிதழ் இருக்கின்றது. பாராளுமன்றத்திற்கு சிறைச்சாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு நபராக அதிலும் தமிழராக இருக்கின்றீர்கள். அதிலே கிழக்கிலும் தமிழ் மக்கள் என்ற ரீதியிலும் பெருமைப்பட வேண்டிய விடயம். அந்த உணர்வை நீங்கள் எப்படி உணருகின்றீர்கள்?

பதில் : அது நினைத்து பார்க்க முடியாத நிகழ்வான ஒரு நாள். மக்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்திய பொழுது நான் பல இடங்களில் சொல்லியிருக்கின்றேன் மக்களுக்காக பணியாற்ற வேண்டும் என்பதற்காக என்னை அர்ப்பணித்திருக்கின்றேன். இருந்தாலும் நான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட சூழலிலும் அந்த அரசாங்கத்தினுடைய வெறித்தனமான செயற்பாடுகளிலும் நான் சற்று தளர்ச்சியிலிருந்தேன். பாராளுமன்ற தேர்தலிலே எங்களுடைய மக்களின் அழிவுகளும் இளைஞர்களினுடைய உத்வேகமும் என்னை மீண்டும் இறுதிவரை உத்வேகத்துடன் உழைக்க வேண்டும் என்ற மனநிலையை கொடுத்தது. அது மட்டுமல்ல நான் ஒரு குற்றவாளியாக்கப்பட வேண்டும் இல்லை தண்டனை ஊடாக பிரச்சனைகளை முடக்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய பொது எதிரிகள் கூட மக்கள் சிறப்பான செய்தியை வழங்கியிருந்தார்கள். அந்தடிப்படையில் அந்த வெற்றியை என்னுடைய வாழ்க்கையை மக்களுக்காக உறுதிப்படுத்திய ஒரு வெற்றியாக பார்க்கின்றேன்.

கேள்வி : உங்களுடைய ஆரம்ப பயணம் என்பது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைக்கப்பட்ட ஒரு போராட்டத்தில் போராடியவர் என்ற வகையிலும் தற்பொழுது நீங்கள் அந்த ஆயுதம் ஏந்தி போராடிய எம்முடைய அந்த கனவான இலக்குக்கும், தற்பொழுது நீங்கள் பயணிக்கும் அரசியலுக்குமுள்ள வேறுபாட்டை எப்படி பார்க்கின்றீர்கள்?

பதில் : நானும் என்னுடைய மூத்த அரசியல்வாதிகளினுடைய பேச்சு காரணமாக இந்த நாட்டில் ஏற்பட்ட மாற்றத்தினூடாக அறிக்கையில் இழுத்துவரப்பட்டேன் நீங்கள் சொல்லதுபோல் தமிழீழம் தேசியம் வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை முழுங்கினார்கள். ஆனாலும் அது தமிழர்களுக்கு தேவையான விடயமாக கருதப்பட்டாலும் அதை அடைவதற்கான விதிமுறைகளை எந்த தலைவர்களும் சரியாக திட்டமிட்டு கொடுக்கவில்லை அல்லது திட்டமிட்ட விடயங்களை அமுலாக்கவில்லை அல்லது கையிலே வந்த விடயங்களை சரியாக பறித்தெடுக்கவில்லை என பல குற்றச்சாட்டுக்களை நான் முன்வைத்திருக்கின்றேன் உண்மையும் கூட அந்த வகையில் அதில் இழுத்துவரப்பட்டவர் என்ற அடிப்படையிலே எங்களுடைய காலச்சூழல் எங்களுடைய தலைமைகளின் தீவிர தன்மை அதுபோன்று கிழக்கு மாகாண மக்களுடைய வலி வேதனை அவர்களுடைய அடக்குமுறை அவர்களுடைய பொருளாதார பிரச்சனை அவர்களின் உள்ளக விரிவு பிரச்சனைகளை வட பகுதியை மையமாக கொண்ட தலைவர்கள் சரியாக அறிந்திருக்கவில்லை.

இதன் காரணமாக இயல்பாகவே கிழக்கு மாகாணத்தை பற்றுக்கொண்டவர்கள் என்ற அடிப்படையிலே கிழக்கு மாகாணத் தில் தனித்துவமான அறிக்கையில் கூறப்பட்டோம். இன்று கிழக்கு மாகாணத்தினுடைய தனித்துவம் கிழக்கு மாகாணத்தினுடைய பாரம்பரியம் கலை கலாச்சாரம் குறிப்பாக தமிழர்களினுடைய பெரும்பான்மையை உறுதிப்படுத்தல் கல்வி பொருளாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற இலக்கோடு நிரந்தரமான ஒரு தீர்வு திட்டத்தை அவர்களுக்கே வெற்றியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற போலியில்லாமல் நியமாக செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்வதற்கு முயற்சி எடுக்கின் றேன். குறிப்பாக நீங்கள் சொன்ன மக்களை மயக்குகின்ற சில வசனங் களிலே ஒப்பிட்டதாக வடகிழக்கு நிறைந்த சுயநிர்ணய உரிமை என்ற அதிலிருந்து இன்று என்னுடைய அரசியல் கொள்கையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு இழுத்துவரப்பட்டுள்ளது. அவர் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் உண்மை அதுதான். அவர்களும் இந்த மாகாணசபை மறுமை அதில் அதிகாரம் 13ஆம் திருத்தம் இதை பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் வந்திருக்கின்றார்கள். ஆகவே இப்பொழுது ஒருதருக்கும் வடகிழக்கு இணைப்பு சுயநிர்ணய உரிமை என்பதனை தாண்டி 13 ஆம் திருத்தத்தின்படி பாதுகாப்போம் என்ற அடிப்படையில் சிந்திக்கின்ற சூழலிலே நாங்களும் ஒன்றாக சிந்திக்கின்றோம் இல்லையென்றால் ஒன்றாக பயணிப்போம்.

கேள்வி : ஆயுத போராட்டத்தை ஆரம்பிக்கின்ற பொழுது நீங்கள் ஒரு பங்குதாரியாக இருக்கின்றீர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பை நீங்கள் தானே ஆரம்பித்து அனுப்பி வைத்திருக்கின்றீர்கள். அப்படியாக இருந்தால் நீங்கள் த.தே.கூட்டமைப்பினுடைய ஒற்றுமையையும் இணைத்துக்கொண்டு ஏன் செல்ல முடியாது?

பதில் : த.தே.கூ ஆரம்பிக்கப்பட்ட காலம் என்பது விடுதலைப் போராட்டம் உச்ச கட்டத்தில் இருந்த பொழுது அந்த அமைப்பால் உருவாக்கப்பட்ட அமைப்பு தான் த.தே.கூட்டமைப்பு ஆனால் 1923 ஆம் ஆண்டு சேர் பொன் இராமநாதன் போன்றவர்களுடைய காலப்பகுதியிலே தமிழீழ கருத்தால் உருவாக்கப்பட்டு விட்டது. சிங்களவர்களுடன் இணைந்து அவர்கள் ஒன்றாக பயணித்த விளக்கால்களுக்கு கொடி பிடித்த காலங்களிலே ஏற்பட்ட தலைமைத்துவ பிரச்சனைகளிலில் இருந்தே கருத்தாடல்கள் எல்லாம் ஆரம்பித்துவிட்டது. அதன் பின்னர் வந்த 70 ஆம் ஆண்டு தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் இராமலிங்கம் அவர்கள் கொண்டுவந்த தமிழீழ பிரகடனத்தை செய்து உச்சகட்டமாக எதிர்க்கட்சி தலைவராக வந்தார். இவ்வாறான வரலாற்றை ஒட்டி பின்னர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதற்குள்ளே பல மாற்றங்கள் நிகழ்ந்து பின்னர் அமைப்புகளில் வந்த போராட்டங்கள் குத்துவெட்டுக்கள் குழிபறிப்புகளை தாண்டி விடுதலைப்புலிகள் பலமான ஒரு அமைப்பாக இருந்த பொழுது ஒன்றும் செய்யமுடியாமல் அவர்களுடன் சேர்ந்து இயங்கக்கூடியவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கியிருந்தார்கள். ஆகவே எல்லாவற்றையும் நீங்கள் ஆழமாக பார்த்தால் சில நேரம் பலப்பரீட்சைகளும் அல்லது அவர்களுக்கான வாழ்வாற்கான வழிகளைத் தான் தேடிக்கொண்டார்களே தவிர உண்மையாக நேர்மையாக அவர்கள் போராட்டத்திலும் சரி அல்லது அவர்கள் எடுத்த பாதையிலும் சரியாக இயங்கினார் என்றால் ஒருவரும் குற்றம் சொல்லிவிட முடியாது.

தொடரும்...

இரணியன்

# ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் சந்தேகநபர் பிணையில் விடுதலை – நடக்கபோவது என்ன?

ஈஸ்டர் தாக்குதல்களை நடத்திய பயங்கரவாதிக்கு உதவிய குற்றச்சாட்டு மற்றும் ஹிசாலினி மரணம் தொடர்பான வழக்குகளில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஈஸ்டர் தாக்குதல்களை நடத்திய பயங்கரவாதிக்கு உதவியதாக குற்றம்சாட்டப்பட்ட வழக்கு அன்று (வியாழக்கிழமை) கொழும்பு கோட்டை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இதன்போது தலா இரண்டு 50 இலட்சம் ரூபாய் பிணைகளில் அவரை விடுவிக்கக் கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டார். இதே வேளை நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த சிறுமி ஹிஷாலினி மரணித்தமை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகளுக்காக கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றிலும் அவர் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன் போது, அவ்வழக்கிலும் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ள நிலையில் ஈஸ்டர் குண்டு தாக்குதலின் முக்கிய நபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றும் ஒரு செய்தியை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது. அந்த வகையில் பார்த்தால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை யாரின் தலையில் அல்லது எந்த கட்சியில் பலி சுமத்துவது என்னும் நிலைப்பாட்டில் அரசாங்கம் காணப்படுகின்றது.

குறிப்பாக அல்-கைதா, தலிபான், லக்சரி தொய்பா, ஹமாஸ் போன்ற 38 அரபிய தீவிரவாத அமைப்பு உள்ளது. இதில் கூடுதலாக பாகிஸ்தான் ஈரான், ஈராக், கந்தகான லிபியா பலஸ்தீன் போன்ற நாடுகளில் ஆங்காங்கே இயங்கி வருகின்றது. இந்த நிலையில் இவர்களுடன் இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்கள் அல்லது இலங்கையில் இருக்கக்கூடிய தௌகித் யமாத் தொடர்பு இருக்கின்றதா என்பது பற்றியும் தற்பொழுது ஆராயப்பட்டு வரும் நிலையில் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்கள் சஹறான் போன்ற தீவிரவாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகமும் தற்பொழுது வலுப்பெற்றிருக்கின்றது. அதுபோன்று மற்றுமொரு சந்தேக நபரான அசாத்சாலி இவரும் அரசியல் பின்னணி கொண்டவர் உண்மையிலே ஜிகாத் என்னும் ஒரு இஸ்லாமிய அமைப்பை கொண்டு காத்தான்குடி, ஒட்டமாவடி, அக்கறைப்பற்று, தர்க்கார், புத்தளம் போன்ற பிரதேசங்களில் ,யக்கிவந்தவர் எம்.ஏ.எல். எம் ஹிஸ்புல்லா ஆவார். ஆனால் அவரை இந்த அரசாங்கம் கைது செய்யவில்லை அவர் கோட்டபாய ராஜபக்சவுடன் தற்பொழுது நெருங்கிய தொடர்பில் உள்ளார். அண்மையில் அரபிய நாட்டின் விஜயம் ஒன்றின் பொழுது ஹிஸ்புல்லா அவரும் அழைத்து செல்லப்பட்டார் என்பது முக்கிய விடயமாகும். அதேநேரம் ஒட்டமாவடியில் பாரிய நிலப்பரப்பு சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை நிருவியுள்ளார். இஸ்லாமிய கற்கை நெறிக்கான அல்லது இஸ்லாமிய அடிப்படைவாதத்தை கொண்டு செல்கின்ற ஒரு பல்கலைக்கழகமாகும். அண்மைக்காலமான அவரது செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தற்பொழுது இருக்கின்ற கோட்டபாய ராஜபக்ச அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற செயற்பாடாகவே அமையப்பெற்றிருக்கின்றது.

ரிஷாட் பதியூதின் கைது என்பது அவரை நிலைகுழைய வைத்து அவருடைய கட்சியை சின்னாபின்னமாக்கி அரசியல் அரங்குகளில் இருந்து அப்புறப்படுத்துவதே சிங்கள பேரினவாதிகளின் நோக்கமாகவும் இருந்தது. ரிஷாட் பதியுதீன் போன்றவர்கள் தீவிரவாதிகளுடன் தொடர்பினை மேற்கொண்டிருந்தால் கடந்த 30 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் இதே அரசாங்கம் அவர்கள் கட்சியையும் குறிப்பாக ரிஷாட் பதியுதீனையும் பாரிய செல்வாக்கை வழங்கி தொடர்ந்தும் அக்காலகட்டத்தில் அமைச்சுப்பதவியில் வைத்திருந்தது. குறிப்பாக அவர் அந்நிய செலாவாணியை இந்த நாட்டுக்குள்கொண்டு வந்த பெருமை அவரை சாரும் வர்த்தக வாணிப அமைச்சராக இருந்த பொழுது. அது போன்றே கிஸ்புல்லாவும் செயற்பட்டார் ஆனால் முஸ்லிம்களுக்கான தனி அலகு வேண்டும் என்று தமக்கான தனி அலகையும் அவர்களுக் கான இஸ்லாமிய கட்டங்களையும் வகுத்ததன் விளைவே இலங்கை தீவின் ஒரு இஸ்லாமிய தீவிரவாதம் உருவாகுவதற்கு வித்திட்டது எனலாம். அவர் அமைச்சராக இருந்த பொழுது அனைத்து மக்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கும் பொழுது ரிஷாட்டின் விடுதலையின் பின்னர் புத்தளத்தில் இருக்கும் அவரின் இல்லத்திற்கு பெரும்பாலான மக்கள் சென்று சந்தித்து வருவது என்பது மீண்டும் இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒன்று அவருடன் இணைந்து செயற்பட தயாராக இருக்கின்றது என்றே கூறவேண்டும்.

பாராளுமன்ற தேர்தலிலோ அல்லது மாகாணசபைதேர்தலிலோ இம்முறை ரிஷாட் வெற்றிபெறுவார் என்பதில்



மாற்றுக்கருத்தில்லை. தொடர்ந்தும் ரிஷாட் பதியுதீன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் இஸ்லாமிய தீவிரவாதிகள் இலங்கையில் தாக்குதலை நடத்துவதற்கு தயாராக இருப்பார்கள். காரணம் இவர்களினுடைய வலைப்பின்னல் என்பது சர்வதேச ரீதியிலும் வளர்ச்சி கண்டதொன்று. ரிஷாட் பதியுதீன் அவர்களை தொடர்ந்தும் சிறையில் அடைப்பதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுவந்தாலும் அவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளியாக அவரின் இன்றைய விடுதலை பார்க்கப்படுகின்றது. சாதாரண மக்களை பொறுத்தவரையில் ரிஷாட் பதியுதீனுக்கான ஆதரவு தற்பொழுது பெருகி வரும் நிலையில் அரசாங்கம் ஏன் இவரை கைது செய்தோம் என்ற நிலைப்பாட்டிற்கு தற்பொழுது வந்துள்ளது. குறித்த வழக்கில் ரிஷாட் பதியுதீனை சிறையில் அடைத்து தண்டனையை பெற்றுக்கொடுப்பதற்கே அரசாங்கம் இதுவரை காலமும் முயற்சிகளை மேற்கொண்டுவந்தது. ஆனால் அது அவர்களுக்கு கைகூடவில்லை. இந்த நிலையில் கலகொட அத்தே ஞானசாரதேரர் அவர்கள் ரிஷாட் மீது தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்து வந்ததன் ஊடாகவே அவர் கைது செய்யும் நிலை வந்தது. ஒரு வேளை கலகொட அத்தே ஞானசாரதேரர் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்குள் நுழையும் சாத்தியமுள்ளது. அவ்வாறு நுழையப்பெற்றால் பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சைகள் உருவாகுவதுடன் மீண்டும் ஒரு யூலை களவரம் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

ஆகவே துரவரத்தில் இருக்கும் எவரும் அரசியல் செய்வது பொருத்தமற்றதொன்று. தென்னிலங்கையில் இனவாதத்தை விதைப்பவர்களில் ஞானசாரரும் ஒருவர். குறிப்பாக பார்த்தால் முஸ்லிம் அரசியல்வாதிகளுடைய அரவணைப்பிலேயே சஹறான் போன்றவர்கள் வளர்ந்து வருவதற்கு காரணமாக இருந்தது. சஹறானினுடைய சொத்து மதிப்பு என்னும் பொழுது 1400 கோடிகைப் பற்றப்பட்டது. பல சஹறான் மதுரசாக்கள் மூடப்பட்டுள்ளது. அவரின் வீடுகளும் பரிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இலங்கையில் அவர்களின் மதவாதத்தை விதைப்பதுடன் இஸ்லாமிய ஆட்சியை இந்த நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவான வழிவகைகளையே அவர்கள் ஏற்படுத்திவந்தார்கள். குறிப்பாக ஒரு உயிரை கொல்லும் பொழுது அல்ஹாவோ அக்பர் என்று கூறுகின்றார்கள் எப்பொழுதாவது எச் சந்தர்ப்பத்திலாவது தமிழர்களோ சிங்களவர்களோ கிறிஸ்தவர்களோ அவர்களுடைய கடவுள் நாமத்தை உச்சரித்து கொலை செய்கின்றார்களா என்ற கேள்வியை ஞானசார தேரர் எழுப்பியிருந்தது பாராட்டத்தக்கது. இருந்தும் அவர்களுடைய புத்த சாசனத்தின்படி எறும்பைக்கூட கொல்லக்கூடாது என்பது உபதேசம். ஆனால் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் 1 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை சொந்தநாட்டில் படுகொலை செய்வது என்பது இவர்களின் பௌத்த தர்மம் எங்கே போனது என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இஸ்லாமிய தீவி ரவாதம் என்பது இன்று நேற்று அல்ல 1957களிலே ஆரம்பித்த வரலாறு உள்ளது. எது எவ்வாறிருப்பினும் இந்த நாட்டின் புலனாய்வு துறை என்பது அவர்களின் அதிகாரம் என்பது இந்த நாட்டை பாதுகாத்துக் கொள்வதற்கு அவசியமானதொன்று. ஆகவே TID, CID, NIB போன்றவர்களின் சுயாதீன செயற்பாட்டை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். காலத்துக்கு காலம் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் நாட்டின் சட்டதிட்டங்கள் பொதுவாகவே அமையப்பெற வேண்டும். ஆகவே ரிஷாட் அவர்கள் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் தொடர்புடையவர் அல்ல என்பதே நிரூபனமாகும் அதில் மாற்றுக்கருத்தில்லை. அரசியல் இலாபத்திற்காக அரசியல் செய்பவர்கள் ரிஷாட் அவர்களை அரசியலில் இருந்து அப்புறப்படுத்துவதற்கான சதிகளை ஏற்படுத்துகின்றது. ஆகவே உண்மையாக ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரி யார் என்பதை அரசாங்கம் கண்டுபிடித்து தீர்ப்பளிப்பதே நல்லது.

-நெற்றிபொறியன் -

# விவசாயிகளின் நெல் உற்பத்தியில் மண் அள்ளிப்போடும் அரசு



இலங்கை ஓர் விவசாய நாடு சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் தொட்டு மன்னர்கள் ஆட்சியில் விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பல பாரிய குளங்கள் அமைக்கப்பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. சுதந்திரத்திற்கு பின்னரான ஆட்சிக்காலங்களில் குறிப்பாக 1950 - 1978 வரையான காலப்பகுதிகளில் தன்னிறைவுப் பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டு விவசாயத்துக்கு மிக முக்கிய முன்னுரிமை வழங்கப்பட்டதுடன் இலங்கை மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் விவசாய நெல் உற்பத்தி காணப்பட்டது.

அக்காலகட்டங்களில் சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஆட்சியில் அமர்ந்த முதல் பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் ஒரு சட்டம் போட்டிருந்தார் அதாவது மாவட்டங்களுக்கிடையே அரிசி நெல் பரிமாறக்கூடாது என்ற சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது இது 1970களின் முற்பகுதிகளில் கடுமையாக்கப்பட்டிருந்தது. 1978க்கு பின்னரான திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக விவசாயத்துடன் கைத்தொழில் துறையும் சம அளவில் கொண்டு செல்லப்பட்டது. 1978க்கு பின்னர் 2009 ஆம் ஆண்டு வரை எமது அரிசி தேவையை நாமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக எமது நாட்டு அரிசி தேவைக்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு நல்லாட்சி காலத்தில்கூட சீனா இந்தியா போன்ற நாடுகளிடம் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

இந்நிலையில் 2019இல் ஆட்சிப்பீடமேறிய பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பல அதிரடி உத்தரவுகளை பிறப்பித்தார். அது வரை காலமும் விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்டுவந்த அசேதன உரவகைகள் அனைத்தும் முற்றாக தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ் உரங்கள் தடை செய்யப்பட்டமைக்கான காரணங்களாக இரசாயன கிருமி நாசினிகள் அற்ற உணவு வகைகளை உற்பத்தி செய்வது உடல் ஆரோக்கியத்தை பேண வேண்டும் என்பதுடன் நோய்களற்ற மனித சமூகத்தை உருவாக்குதல் சேதனப் பசளைகளின் பாவனை அதிகரித்தல் இயற்கை பசளை திட்டத்தை ஊக்குவித்தல் உர இறக்குமதியில் செலவிடப்படும் அந்நிய செலாவணியை கட்டுப்படுத்தல் என பல காரணங்கள் கூறப்பட்டது. இது ஒருவகையில் நல்ல விடயமாக பார்க்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடானது ஓர் குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் நல்ல பலன்களை நிச்சயமாக தரக்கூடிய சான்றுகள் உள்ளன. ஆனால் இவ் செயற்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்களை விவசாயிகள் சந்தித்து வருகின்றனர். உர வகைகள் கொண்டு விவசாயம் மேற்கொள்ளும் பொழுது அரசு உரமானியங்கள், கிருமிநாசினிகள், விதைநெல்லுகள் என பல வகைகளில் அரசு மானியங்கள் வழங்கிவந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் விவசாய முறையில் ஏக்கருக்கு சுமார் 40 - 50 மூட்டை நெல் அறுவடை செய்யப்பட்டுவந்தது.

இவ்வாறு அறுவடை செய்யப்படும் நெல்களுக்கான நியாய விலைகள் கிடைக்காமல் நெல் மாபியாக்கள் விவசாயிகளை ஏமாற்றிவந்த நிலையில் அரசானது நெல் மூட்டைகளுக்கான ஓர் நிரந்தர விலையை நிச்சயம்பன்னி வர்த்தமானியூடாக அறிவித்து விவசாயிகளின் நெருக்கடிக்கு ஓரளவான தீர்வை கொடுத்தது. தற்பொழுது விவசாயிகளின் மிகப் பெரிய பிரச்சனை யாதெனில் அரசானது திடீரென உரவகைகளை தடை செய்தமையால் அதற்கு மாற்றீடாக சேதன உரவகைகளை உற்பத்தி செய்வதற்கு காலதாமதங்கள் ஆகும். அத்துடன் இரசாயன உரங்களுக்கு பழக்கப்பட்ட மண்ணானது சேதன உரங்களுக்கு மாறி செயல்பட கால தாமதங்கள் ஆகும். அத்துடன் இரசாயன உர பாவனையின் போது ஏக்கருக்கு கொடுக்கும் விளைச்சலானது சேதனபசளையின் போது கிடைக்கப் போகும்நிலை உள்ளது.

முதல் குறிப்பிட்டது போல் ஏக்கருக்கு 40 - 50 மூட்டை இரசாயன உரத்தில் கிடைக்கும் விளைச்சலானது சேதனப் பசளை பாவனையின் போது கிடைக்காமல் போகும் சாத்தியம் உள்ளது. குறிப்பாக இரசாயன உரங்கள் பாவிக்கப்பட்டு ஏக்கருக்கு 40, 50 மூட்டை நெல்லை அறுவடை செய்யும் விவசாயி உழுதல் கூலி, உரம், கிருமிநாசினி, வெட்டுக்கூலி, பராமரிப்பு செலவு என அனைத்தையும் செலவிட்டு பார்த்தால் விவசாயியின் கையில் பெரியளவில் ஆதாயம் கிடைப்பதில்லை. இதில் குறிப்பிட்டளவு ஏக்கர்களில் விவசாயம் செய்கின்றவர்கள் தங்கள் வீட்டுத் தேவைக்கான நெல் மட்டுமே மிச்சமாக உள்ளதாக கூறியுள்ளார்கள். பாரியளவிலான ஏக்கர்களில் விவசாயம் செய்கின்றவர்கள் ஓரளவுக்கு ஆதாயத்தை பெறமுடியும். இவ்வாறான நிலையில் சேதன உரம் கொண்டு பயிர் செய்யும் பொழுது சிறியளவிலான ஏக்கர்களில் நெல் உற்பத்தி செய்பவர் நஷ்டமடைய வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதால் பல பிரதேசங்களில் இம்முறை விதைப்பு நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளதாக மிகவும் மன வேதனையுடன் தெரிவிக்கின்றனர். ஓர் விவசாயி நெல் பயிரிடும் பொழுது பல்வேறு இன்னல்களை சந்திக்கின்றனர்.

விவசாய நிலங்களுக்குள் கால்நடைகள் புகுந்து அழித்தல், யானைகளின் அட்டூழியம், இயற்கை சீற்றங்கள், காலபோகத்துக்கு ஏற்ற மழையின்மை, நெல் பயிர்களில் ஏற்படும் புதிய நோக்க வகைகள், விளைச்சல் குறைவு, விச ஊர்வனங்களால் ஆபத்து, வெட்டுக்கூலிகள் அதிகரித்து செல்லல் போன்ற பல்வேறு நெருக்கடிகளை தொடர்ந்து சந்தித்துவரும் நிலையில் இவ்வாறு அரசு எடுத்துள்ள நடவடிக்கையானது விவசாயிகள் மட்டத்தில் மிகப்பெரும் அதிர்ப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் நெல் உற்பத்தியை விட்டு விலகிச் செல்ல ஏதுவாக அமைகின்றது. இவ்வாறு நெல் உற்பத்தி குறைவடையும் பொழுது வெளிநாடுகளிடம் இருந்து மொத்தமாக அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை தோன்றும். உர இறக்குமதியில் செலவிடப்படும் அந்நிய செலாவணியை விட அரிசி இறக்குமதியில் அதிகம் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். வெளிநாடுகளிடம் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டால் அரிசியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகளின் விலை அதிகரிப்பு ஏற்படும், இது பாமர மக்களை மேலும் இடர் நிலைக்கு கொண்டுசெல்லும். இவ்வாறான நெருக்கடி நிலையில் இருந்து விவசாயிளையும் நாட்டு மக்களையும் காப்பாற்ற வேண்டுமானால் உடனடியாக உரவகைகளை தடை செய்யாமல் படிப்படியாக குறைத்துக் கொண்டு செல்லலாம், இரசாயன உரத்துக்கு பழக்கப்பட்ட மண்ணை படிப்படியாக சேத உரங்களுக்கு நிலத்தை பழக்கப்படுத்தியதன் பின்னர் முற்றாக இரசாயன உரத்தை தடை செய்யலாம். இதை விடுத்து உரத்தை தடைசெய்வதானது அப்பட்டமான விவசாய கொலையாகும்.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் உரப்பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்காவிட்டால் நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் கொழும்பு நோக்கி பாரிய ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்போவதாக அறிவித்துள்ள நிலையிலும் விவசாய அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே அவர்களின் வாக்குறுதிகளை தாங்கள் இனியும் நம்பப்போவதில்லை என்றும் மேலும் கூறியுள்ளனர். எனவே அரசானது உடனடியாக இதற்கான சரியான தீர்வை வழங்க முன்வருவதுடன் நெல் உற்பத்தி வீழ்ச்சியில் இருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும் என்பது அனைத்து விவசாயிகளினதும் மக்களினதும் வேண்டுகோளாகும். அரசு உணரதலைப்படுமா.

**தாயத்தான்**

# விரைவில் ஆரம்பமாகவுள்ள பாடசாலைகளும், தீர்வுகளின்றித் தொடரும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டமும்



கொவிட் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டன. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இதனால் முற்றாகப் பாதிக்கப்பட்டதுடன், இணைய வழி கல்வி நடவடிக்கைகளை ஆசிரியர்கள் ஆரம்பித்திருந்த நிலையில், திடீரென அதிபர் ஆசிரியர்களின் தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து சம்பள முரண்பாட்டை நீக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நாடு முழுவதும் ஆரம்பித்திருந்தனர். தீர்வுகள் எதுவுமின்றி இப் போராட்டங்கள் இன்று வரை தொடர்கின்றன.

இதேவேளை நாட்டில் தற்போது நாளாந்த கொவிட் மரணங்கள் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக நாடு வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க திறந்துவிடப்பட்டுள்ளது. எனினும் கடுமையான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும் என நாட்டு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், பொலிசார் மற்றும் சுகாதாரப் பிரிவினரால் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் தான் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும்21 ஆம் திகதி அளவில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டும் உள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் போராட்டம் கைவிடப்படவில்லை. ஆசிரியர்களின் இவ் சம்பளப் பிரச்சினையானது திடீரென இப்பொழுது முளைத்ததல்ல. கடந்த காலங்களில் அவர்களின் இந்தப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு நாட்டில் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எவ்வித பிரச்சினைகளுமின்றி சுதந்திரமாக முழுமனதுடன் மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதனை உறுதிசெய்யவேண்டியது ஒரு நாட்டினது அரசின் கடமை என்பதில் எவ்வித மாற்றுக்கருத் தும் இல்லை. இதனைச் செய்ய மாறி மாறி நாட்டை ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். அந்த வகையில் தான் இந்த அரசிற்கு ஒரு அழுத்தம் கொடுக்கவேண்டும். அதன் ஊடாக தீர்வைப் பெறவேண்டும் என்ற நிலையில் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் குறித்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் சந்திப்பொன்றை நடத்தியிருந்த நிலையில், எதிர்வரும் வரவுசெலவுத் திட்டங்களின் ஊடாக இரண்டாகப் பிரித்து சம்பள முரண்பாட்டை தீர்த்து வைப்பதாக பிரதமர் அளித்த உறுதிக்கும் தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை. முழுமையாக சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரிக்கையும் விடுத்துள்ளனர். உண்மையில் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அவர்களின் சம்பள முரண்பாடுகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

கொவிட் பரவல் நிலைமையால் நாட்டினது பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியடைந்திருக்கும் இந்நிலையில் அரசினால் முழுமையாக இதற்கு ஒரே தடவையில் தீர்வினை வழங்க முடியாது. இதேநேரம் அரசு காலத்தைக் கடத்துவதால் எதிர்வரும் ஆண்டுகளில் ஓய்வு பெறும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படும் நிலையும் உருவாகலாம் என்பதையும் அரசு கவனத்திற்கொள்ள வேண்டும்.

எனினும் இன்று அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சுயாதீனமாக இயங்குவதில்லை. இச்சங்கங்களுக்குள் அரசியல் கட்சிகளின் தலையீடுகளும், அக்கட்சிகளின் கொள்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அதாவது இவர்களுக்குள் அரசியல் கலப்பு ஏற்பட்டுள்ளது. அரசியல் ரீதியான நியமனங்கள் இடம்பெற்றுவருகிறது என குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்துள்ளன. இத் தொழிற்சங்கங்களுக்குள் ஒற்றுமை என்பதும் சுயாதீனம் என்பதும் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இன்னொருபுறம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நகரப் புற மாணவர்களை விட கிராமப் புற மாணவர்களின் கல்வி நிலை தலைகீழாக மாறியுள்ளது. கிராமங்களில் இன்னும் ஒரு தொலைபேசியை தங்களது பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுக்க முடியாமல் பெற்றோர் அல்லல்படுகின்றனர். கொவிட் பரவலுக்கு மத்தியில் மிக விரைவில் ஆரம்பமாகவுள்ள பாடசாலைகளை எதிர்நோக்கி மாணவர்களும் பெற்றோர்களும் காத்திருக்கின்றனர். தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் இன்று கேள்விக்குறியாகியுள்ளது. கற்றல் நடவடிக்கைகள் அனைத்தும் பின் தள்ளப்பட்டுள்ளது. பரீட்சைகள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளது. பாடசாலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என மாணவர்களின் பெற்றோர் எதிர்பார்த்துள்ளனர்.

அதேவேளை பாடசாலை போக்குவரத்து சேவைகளை முன்னெடுக்கும் சங்கத்தினால், போக்குவரத்து கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாகன உதிரிபாகங்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளமையே இதற்கு காரணமென அந்த சங்கத்தின் தலைவர் எல். மல்ஸ்ரீ டி சில்வா தெரிவித்துள்ளார். இதற்கமைய எதிர்வரும் நாட்களில் பாடசாலைகள் மீள திறக்கப்படவுள்ள நிலையில், மாணவர்களின் போக்குவரத்து சேவைக்கான கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான ஆசிரியர்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிட்டு, கற்பிக்கத் தயார் நிலையிலுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். கொழும்பு, ஹோமாகம மற்றும் பாதுக்க ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளை துப்பரவு செய்யும் நடவடிக்கைகளை பார்வையிட கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்நிலையில்,பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்பதாக தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பதவி நிலைகளின் அடிப்படையிலான பாகுபாடு, வருடாந்த இடமாற்றம் உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும். தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காவிட்டால் எதிர்வரும் 21ஆம் திகதி, கல்விசாரா ஊழியர்கள் சேவைக்கு சமுகமளிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை ஆரம்பிக்கும் செயற்பாடு தொடர்பில், அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார். எவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டாலும் தங்களது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வாறான இழுபறி நிலைமைகளுக்கு மத்தியில் நாட்டின் பாடசாலைகளை ஆரம்பிப்பதில் பெரும் சிக்கல்நிலை உருவாகும் வாய்ப்பு உள்ளது. மாணவர்களின் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளதைக் கருத்திற்கொண்டு அரசும், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களும் விரைவாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென நாமும் கேட்டுக்கொள்கின்றோம்.

- கரன்




# பிராந்திய செய்திகள்



## பசுமை விவசாயத்திற்கு 14 பேர் கொண்ட குழு ஒன்று நியமிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 14 பேர் கொண்ட குழு ஒன்றை பசுமை விவசாயத்துக்கான நியமித்துள்ளார்.

அதனுடன் தொடர்புடைய விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி செயலாளர் பி.பீ ஜயசுந்தரவினால் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

14 பேர் அடங்கிய குறித்த ஜனாதிபதி செயலணியின் தலைவராக விஜித் வெலிகல நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலணியின் ஏனைய உறுப்பினர்களாக லலித் செனவிரத்ன, கசுன் தாரக அமல், மாலிந்த செனவிரத்ன, ரசிக துசித குமார, கலாநிதி பி.கே.ஜி காவந்திஸ்ஸ, சமந்த பெர்னாண்டோ, சமுதித குமாரசிங்க, அஜித் ரண்தூனு, என்.எம் கலீட், ஷம்மி கிரிண்தே, நிர்மலா கரவ்கொட, சமிந்த ஹெட்டிகன்கானம்கே மற்றும் நிஷான் டி சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இடர்வரு நிலையிலுள்ள சிறுவர்களுக்கு பாடசாலைக்குள் கல்விக்கான வள இருப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு !

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கமைவாக தரம் 06 முதல் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட அனைத்து பாடசாலைகளிலும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் வலுவூட்டுதல் - 2021 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் இடர்வரு நிலையிலுள்ள சிறுவர்களுக்கு பாடசாலைக்குள் கல்விக்கான வள இருப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு வெள்ளிக் கிழமை (15) பொத்துவில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் செல்வி.வு.திவ்வியாவின் ஏற்பாட்டில் உதவி பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயிலின் தலைமையில் பொத்துவில் கல்வி வலயம் மற்றும் திருக்கோவில் கல்வி வலயங்களுக்குட்பட்ட 05பாடசாலைகளின் பங்குபற்றுதலுடன் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.சுபையிர், அக்கரைப்பற்று வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில், திருக்கோவில் கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் கே. கங்காதரன், ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.முபாரக் மற்றும் 05 பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை மாணவர் ஆலோசனைப் பணிக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.




## மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதில் அதிபர், ஆசிரியர்கள் பெரும் பங்களிப்பு

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல கல்வி வலயங்களில், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிபாளர் விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்தார். அன்று (15) சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற கொவிட் வைரஸ் தொற்று தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு மாவட்டத்திலுள்ள, கொழும்பு மாநகர சபை மற்றும் குடும்ப சுகாதார பணியகத்தின் பாடசாலை சுகாதார அலுவலகங்களின் ஊடாகவும் இந்த தடுப்பூசி வேலைத்திட்டம் இடம்பெறுகின்றது. கொழும்பு மாவட்டத்தின் ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்குட்பட்ட பிரதேசங்களின் சில பாடசாலைகளிலும் இன்று தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. அன்று காலை தர்ஸ்டன் கல்லூரியில் உள்ள தடுப்பூசி மையத்தை பார்வையிட்டதாக தெரிவித்த அவர், அங்கு பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் மிக நேர்த்தியாகவும், தெளிவாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் தடுப்பூசிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது" என்றும் அவர் தெரிவித்தார்



இதற்கமைய, அடுத்த சில நாட்களில், இலங்கையில் 18 முதல் 19 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களுக்கும், அதாவது 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் 2021 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்ற மாணவர்களுக்கும் தடுப்பூசிகளை வழங்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அடிப்படைவசதிகளற்ற கிராமத்தை நோக்கி நகர்ந்த மாஹிரின் மக்கள் பணி : அறபா நகரில் கல்விக்கான விதை போடப்பட்டது

இறக்காமம், குடிவில் பிரதேச அறபா நகரில் சுமார் 33 குடும்பங்கள் எந்தவித அடிப்படைத் வசதிகளுமின்றி மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த பிரதேசத்தில் பாலர் பாடசாலை ஒன்றின் தேவை நீண்டகாலமாக உணரப்பட்டிருந்த நிலையில், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் மற்றும் குடும்பத்தார் ஆகியோரின் பங்களிப்பினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பாலர் பாடசாலையைத் திறந்து வைக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

மேலும் இந்நிகழ்வில் பாலர் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்கள், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதோடு ஆசிரியை ஒருவரும் நியமிக்கப்பட்டு அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை சம்பளத்தினை மாதா மாதம் வழங்கவும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் ஐ.எல்.எம் மாஹிர், தொழிநுட்ப அதிகாரி ஏ.ஆர். இர்ஷாட், குடிவில் பிரதேச கிராம நிலதாரி எம்.ஜே.எம். அத்திக், மீனவர் சங்கத் தலைவர் சப்றாஸ், அறபா நகர் தலைவர் அமீன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க மிக விரைவாக பாலர் பாடசாலை அமைத்துக் கொடுத்து அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்த ஐ.எல்.எம். மாஹிர் அவர்களுக்கும் இவ் வேலைத் திட்டங்கள் முழுமையடைய பாடுபட்ட தொழிநுட்ப அதிகாரி ஏ.ஆர். இர்ஷாட் அவர்களுக்கும் குடிவில் பிரதேச அறபா நகர் மக்கள் இதன்போது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.







# சினிமா துளிகள்



## ஜோதிகாவின் 50வது படம் - மணல் சிற்ப வடிவில் வாழ்த்து

சசிகுமார், சமுத்திரகனியுடன் ஜோதிகா நடித்துள்ள உடன்பிறப்பே திரைப்படம் இன்று ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது.

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்தவர் நடிகை ஜோதிகா. அஜித்தின் 'வாலி' படத்தில் சிறிய கதாபாத்திரம் மூலம் தோன்றிய அவர், சூர்யாவின் பூவெல்லாம் கேட்டுப்பார் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். அதன்பிறகு ரஜினி, கமல், விஜய், அஜித் உள்ளிட்ட முன்னணி ஹீரோக்களுடன் இணைந்து நடித்துள்ளார்.

தன்னுடன் பல படங்களில் நடித்த முன்னணி நடிகரான சூர்யாவை காதலித்து திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்கு பிறகு திரைப்படங்களில் நடிப்பதை தவிர்த்து வந்த ஜோதிகா, '36 வயதினிலே' படத்தின் மூலம் சினிமாவிற்கு ரீ-என்ட்ரி கொடுத்தார். கடந்த சில ஆண்டுகளாக கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் திரைப்படங்களில் தொடர்ந்து நடித்து வருகிறார். இந்நிலையில் ஜோதிகாவின் 50வது படமான 'உடன்பிறப்பே' திரைப்படம் இன்று அமேசான் ஓடிடி தளத்தில் வெளியாகி உள்ளது. இதையொட்டி மெரினா கடற்கரையில் ஜோதிகாவின் மணல் சிற்பம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் ஜோதிகாவின் புகைப்படத்துடன் 'உடன்பிறப்பே' படத்தின் வெளியிட்டு தகவல் இடம்பெற்றுள்ளது. அதோடு வாழ்த்துக்கள் 'ஜோதிகா 50' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




## டாக்டர் படத்தின் 5 நாள் இமாலய வசூல், இத்தனை கோடிகளா

சிவகார்த்திகேயன் நடிப்பில் டாக்டர் படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. இப்படத்தின் மீது ரசிகர்களுக்கு பெரும் எதிர்ப்பார்ப்பு இல்லை ஆரம்பத்தில். ஏனெனில் படத்தின் ப்ரோமோ எதுமே சிரிப்பு வரவில்லை என்றனர், ஆனால், படத்தில் அவை சரியாக பொருந்தியதால் படம் மெகா ஹிட் அடித்துள்ளது.

இந்நிலையில் டாக்டர் படம் உலகம் முழுவதும் 5 நாட்களில் ரூ 40 கோடிகளுக்கு மேல் வசூல் செய்துள்ளதாம். சிவகார்த்திகேயன் திரைப்பயணத்தில் கண்டிப்பாக இது ஒரு மைல்கல் படம் தான்.



## சினிமாவில் ரீ-என்ட்ரி கொடுக்கும் மீரா ஜாஸ்மின்



திருமணத்துக்கு பின்னர் படங்களில் நடிப்பதை தவிர்த்து வந்த மீரா ஜாஸ்மின், தற்போது 7 வருடங்களுக்கு பின் மீண்டும் நடிக்க வருகிறார்.

மலையாள நடிகையான மீரா ஜாஸ்மின், கடந்த 2002-ம் ஆண்டு லிங்குசாமி இயக்கத்தில் வெளியான 'ரன்' படத்தின் மூலம் கோலிவுட்டில் ஹீரோயினாக அறிமுகமானார். இதையடுத்து அவர் நடித்த 'சண்டைக் கோழி' படம் ரசிகர்களால் கொண்டாடப்பட்டது.

தமிழ் தவிர தெலுங்கு, மலையாள படங்களிலும் பிசியாக நடித்துக் கொண்டிருந்த அவர், 2014ம் ஆண்டு அனில் ஜான் டைட்டஸ் என்பவரைத் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டார்.

திருமணத்துக்கு பின்னர் படங்களில் நடிப்பதை தவிர்த்து வந்த அவர், தற்போது 7 வருடங்களுக்கு பின் மீண்டும் நடிக்க வந்துள்ளார். மலையாள இயக்குனர் சத்யன் அந்திக்காடு இயக்கத்தில் உருவாக உள்ள புதிய படத்தில் நடிக்க இருக்கிறார். இதற்காக நடிகை மீரா ஜாஸ்மின், தன் உடல் எடையை 20 கிலோ வரை குறைத்து இருக்கிறாராம்.

## தனுஷ் படத்தின் புதிய அப்டேட்


நீண்ட இடைவெளிக்குப் பிறகு செல்வராகவன், தனுஷ் கூட்டணியில் உருவாக இருக்கும் படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது.

காதல் கொண்டேன், புதுப்பேட்டை, ஆயிரத்தில் ஒருவன், மயக்கம் என்ன, இரண்டாம் உலகம் என வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களை இயக்கி பிரபலமானவர் செல்வராகவன். இவர் இயக்கத்தில் அடுத்ததாக 'நானே வருவேன்' திரைப்படம் உருவாக உள்ளது.


தனுஷ் ஹீரோவாக நடிக்க உள்ள இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்க உள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஒகஸ்ட் 17-ந் திகதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் திட்டமிட்டபடி தொடங்கப்படவில்லை. பீஸ்ட் படத்தில் செல்வராகவன் நடித்து வந்ததால் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்க தாமதமானது.

இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பு அக்டோபர் 16ம் திகதி தொடங்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. நானே வருவேன் படத்தை கலைப்புலி தாணு தயாரிக்க இருக்கிறார்.





# பல்சுவை கதம்பம்



## இறால் வடை

**தேவையான பொருட்கள்**

இறால் - 15

கடலை பருப்பு - 1/4 கப் ஊறவைத்தது

சின்ன வெங்காயம் - 10

பச்சை மிளகாய் - 2

கறிவேப்பிலை - 1 கொத்து

இஞ்சிபூண்டு விழுது - 1/4 ஸ்பூன்

தேங்காய் துருவல் - 3ஸ்பூன்

மஞ்சள் தூள்- 1/2 ஸ்பூன்

உப்பு - தேவையான அளவு

எண்ணை - 1/2 கப் பொரிக்க

**செய்முறை**

முதலில் கடலைப்பருப்பை தண்ணீரை சுத்தமாக வடித்து மிக்சியில் அரைக்கவும்

பிறகு இறால் தவிர மேற்கண்ட எல்லாவற்றையும் மிக்சியில் பருப்புடன் போட்டு மையாக அரையாமல் ஒன்றிரண்டாக இருக்குமாறு இரண்டு சுற்று சுற்றி எடுக்கவும்

அதனுடன் பொடியாக நறுக்கிய இறாலை சேர்த்து கலக்கவும்

இதனை வடைகளாக தட்டி எண்ணையில் பொரித்து எடுக்கவும் .



## முகத்தில் உள்ள கருமையை நீக்கி பளிச்சிட செய்யும் அழகு குறிப்புக்கள் !!



கூந்தல் பராமரிப்பு முதல் சரும பராமரிப்பு வரை தேனை பயன்படுத்தலாம். முகத்தில் முகப்பரு, பருக்களால் பள்ளம், சிறு சிறு குருக்கள், உஷ்ணகட்டிகள், தேமல் அனைத்தையும் தேனை பயன்படுத்தி சரிசெய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

எலுமிச்சை தோலை நன்கு காயவைத்து பொடியாக்கி கொண்டால் ஏராளமான அழகு குறிப்புகள் செய்து நம் முகத்திற்கு பொலிவு பெற செய்யலாம். எலுமிச்சையில் இருக்கும் ப்ளீச்சிங் தன்மை சருமத்தை அழகாக்குகிறது.

எலுமிச்சை மற்றும் தேன் கலந்து பயன்படுத்துவதால் கிடைக்கும் சரும நன்மைகள் குறித்து இங்கு தெரிந்து கொள்வோம். எலுமிச்சை பவுடரை, தேன் மற்றும் தயிருடன் நன்றாகக் சேர்த்து முகத்தில் முழுவதும் அப்ளை செய்ய வேண்டும். இதனால் முகத்தில் உள்ள கருமை முழுவதும் நீங்கி முகம் பளிச்சிடும்.

எலுமிச்சை பவுடர், தேன், சந்தனம் மற்றும் கற்றாழை நான்கையும் நன்கு சேர்த்து கெட்டியாக பேஸ்ட் போல் கலந்து முகத்தில் அப்ளை செய்து கொள்ளுங்கள். இதனை வறண்ட சருமத்தினர் பயன்படுத்தினால் ஈரப்பதம் கிடைத்து சருமம் மென்மையாக மாறும்.


முகத்தில் கரும்புள்ளிகள், பருக்களால் வந்த பள்ளங்கள். தழும்புகள் போன்ற பிரச்சனைகளுக்கு தேன் தினசரி பயன்படுத்துவதன் மூலம் நல்ல தீர்வு கிடைக்கும்.

முகம், கழுத்துக்கு தேவையான அளவு தேன் எடுத்து இரண்டு டீஸ்பூன் எலுமிச்சைசாறு சேர்த்து நன்றாக கலக்குங்கள். பிறகு முகத்தில் மசாஜ் செய்து தடவுங்கள். தேன் முகத்துக்கு தேவையான ஈரப்பதத்தை தருவதோடு வறட்சியிலிருந்து காத்து, பருக்கள் வராமல் தடுக்கும்.

# நாட்டில் ஜனநாயகம் அடக்கி ஒடுக்கப்படுகின்றது தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

**தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான – மாவை சோனாதிராஜா**

கடந்தவார தொடர்ச்சி...



கேள்வி : உங்களுடைய கட்சியில் இருக்கின்ற அங்கத்துவ கட்சிகள் மீது அவர்களும் போர் குற்றம் சம்மந்தமாக அல்லது ஒரு இனப்படுகொலை சார்பிலே விசாரிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகின்ற கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?

பதில் : ஆம் அதை ஏற்கனவே நாங்கள் அனுப்பிய இனப்படுகொலை என்பதை முன்னிறுத்தி சர்வதேச குற்ற விசாரணைக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற கருத்தை சம்மந்தன் கரைத்து வைத்திருக்கின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவரும் சம்மதித்தாலும் இனப்படுகொலை மற்றும் அரசு இழைத்த போர்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் அதிலே இனப்படுகொலை முதலாவதாக நாங்கள் இன்னொரு கடிதத்தை மனித உரிமைக்கு அனுப்பவில்லை நாங்கள் தான் வைத்திருக்கின்றோம்.

தற்பொழுது திரு. சம்மந்தன் அவர்கள், திரு.கஜேந்திரகுமார் அவர்கள், விக்னேஸ்வரன் அவர்கள் கையெழுத்து வைத்த அந்த கடிதத்திலும் நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு தான் அந்த கடிதத்தில் கையெழுத்து வைக்க அனுமதித்தார்கள். ஆகவே அதை நாங்கள் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு எங்களுடைய ஒற்றுமை மிக முக்கியமானது.

கேள்வி : இதிலே ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் மூன்று கட்சிகளும் இங்கே இராணுவ துணைக்குழுக்களாக ஈ.பி.டி.பி உட்பட அக்காலகட்டத்திலே செயற்பட்டிருந்தார்கள். ஆகவே இவர்கள் இராணுவத்துடன் அக்காலத்தில் இருந்து இனப்படுகொலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்று வைக்கப்படுகின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கூறியிருந்தார். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?

பதில் : தற்பொழுது நான் அதைப்பற்றி பேசுவது பொருத்தமில்லை என நினைக்கின்றேன். அந்த குற்றம் சுமத்தல்கள் எல்லாம் பகீரங்கமாக தேவையில்லாதவை. ஏனென்றால் அதன் பின்னர் நாங்கள் 10 ஆண்டுகளாக பல விடயங்களில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம். இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது, அரசுக்கு எதிராக ஒன்றுபட்டு செயற்படுவது, மனித உரிமை பேரவையிலே நாங்கள் ஒன்றுபட்டு செயற்படுவது மற்றும் கையெழுத்து இடுகின்றோம் எனவே இவ்வாறெல்லாம் நாங்கள் முன்னேறியிருக்கின்றோம்.

# அரசியலில் இரட்டை வேடம் போடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி

கடந்தவார தொடர்ச்சி...



ஒற்றையாட்சிக்குள்ளே கடந்த 74 வருடங்களை எடுத்துப்பார்த்தால் தமிழ் மக்களினுடைய நிலைமை கரைந்துகொண்டுபோகின்ற ஒரு திசையில் தான் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே ஒற்றையாட்சிக்குள்ளே இருக்கின்ற வரைக்கும் தமிழ் மக்களினுடைய இருப்பு என்பதனை உறுதிப்படுத்த முடியாது என்பது மட்டுமல்ல அதற்கு அப்பால் இந்தியாவினுடைய பாதுகாப்பு கவசமாக இருக்கின்ற தரப்பும் முற்றுமுழுதாக அழிந்து போகின்ற நிலையை தான் உருவாக்கும் எனவே அந்த யதார்த்தத்தை இந்தியா விளங்கிக்கொண்டு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பரவலாக இன்று இருக்கின்ற நிலைமைகள் சம்மந்தமாக ஏனையவர்களும் பதிவு செய்திருந்தார்கள். இந்திய பிரதிநிதிகள் தமிழ் மக்களினுடைய நலன்கள் தாங்கள் அது சம்மந்தமான விடயங்களில் உறுதியாக இருப்போம் என்ற விடயத்தை பதிவு செய்தார். அதே சமயம் தங்களது பார்வையில் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதன் ஊடாக அந்த பாதுகாப்பை ஏற்படுத்தலாம் என்ற கருத்தையும் அவர் பதிவு செய்திருந்தார். இதுவொரு ஆரம்பம் எங்களை பொறுத்தவரையில் எங்களது அமைப்பு .இந்தியாவினுடைய உயர்மட்டத்தில் இருந்து 2009க்கு பின்னர் முதல் தடவையாக சந்தித்த பொழுது எதிர்காலத்தில் எங்களது நிலைப்பாடுகளை இன்னும் இன்னும் இந்தியாவிற்கு வலியுறுத்தி இந்தியாவை நாங்கள் பார்க்கின்ற இந்த அரசியல் நிலைமைகளை ஏற்றுக்கொள் வைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து செய்வோம் மக்களும் எங்களுடைய பார்வை சரி என்றால் அதை பிளப்படுத்த வேண்டும் என்பதும் மக்களின் தேவையாகவும் இருக்க வேண்டும்.

அரசியல் அடக்கு முறை பற்றி விரிவாக பேசப்பட்டது நான் மட்டுமல்ல ஏனையவர்களும் அந்த விடயத்தை தெளிவாக கூறியிருந்தார்கள் பல்வேறு துறைகள் சார்ந்த கோணத்தில் எந்தளவு தூரம் இந்த அரசாங்கம் தமிழ் மக்களினுடைய இருப்பை இல்லாமல் செய்கின்ற வகையில் செயற்படுகின்றார்கள் என்ற விடயங்கள் மிகத்தெளிவாக பதிவு செய்யப்பட்டது. கல்வி பொருளாதாரம் வியாபாரம் என்ற பல கோணங்களில் அந்தவிடயங்கள் மிகத்தெளிவாக பதிவு செய்யப்பட்டது. ஆகவே இந்தியாவை புறம்தள்ளி செயற்படுகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் அது இலங்கைக்கு ஆபத்தை கொடுக்கின்ற செயற்பாடாகவே அமைகின்றது அல்லதுபோனால் சீனாவுடனான இராஜதந்திர நடவடிக்கைகளை செயற்படுத்தலாமா என்றும் ஆராயப்பட வேண்டும். இனப்படுகொலைக்கான தீர்வு திட்டம் வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அதற்கான ஆவணங்கள் போதாதன் காரணத்தால் பூகோள அரசியலில் மாற்றத்தை கொண்டு வருவது பெரும் சவாலாக அமைந்துள்ளது. ஆகவே மக்களை மீண்டும் உசுப்பேற்றி இந்த நாட்டில் மீண்டுமொரு இரத்த களறியை உருவாக்காது தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் தமிழீழ கனவை அடையும் வரை செயற்பட வேண்டும் என்பதே இன்றைய யதார்த்த பூர்வமான உண்மை. இதனை விடுத்து இரட்டை முகவர்களாக செயற்படும் செயற்பாட்டிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்பது இக்கட்டுரையின் பிரதான நோக்கம்.

சுழியோடி

# முற்றுப்புள்ளிகள் தொடர்குறியாகும் கரங்கா வட்டையின் கதை

கடந்தவார தொடர்ச்சி...

இதனையடுத்து ஊரில் இருந்த சட்டத்தரணி முஷாரப் எம்.பியவர்கள் சம்மாந்துறைக்கு நேரடியாக வந்து விவசாயிகளை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். ஆக்கிரமிப்பு செய்த குழுவினர் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவை கொண்டு பொலிஸ் நடவடிக்கைகளை தடுத்துநிறுத்த முற்படுவ தாக நம்பகமான தகவல் கிடைத்துள்ளதாக சட்டத்தரணி நசீல் அவர்கள் ஹரீஸ் எம்.பிக்கு தெரிவித்தனையடுத்து கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டலில் அவசரமாக கூடிய 20ம் திருத்தத்தை ஆதரித்த 07 முஸ்லிம் எம்.பிக்களும் கரங்கா வட்டை, ஞானசார விடயங்கள் தொடர்பில் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவை சந்தித்து பேசுவதற்கான முயற்சிகளை செய்தனர். அந்த கூட்டத்தில் ஹரீஸ் எம்.பி கரங்கா வட்டை விடயத்தில் உள்ள விடயங்களை ஆழமாக விளக்கி அத்து மீறிய குழுவினர் அமைச்சர் சரத் வீரசேகரவின் ஆதரவை பெற முயற்சிக்கும் செய்தியை கூறினார். தனக்கும் அந்த செய்தி கிடைத்ததாக கூறிய பைசால் காசிம் எம்.பி இவ்விடயத்தை விரைவாக முடிக்க வேண்டும் என்றார். அப்போது முஷாரப் எம்.பியும் இதன் அவசியத்தை வலியுறுத்தினார். இதனை ஆமோதித்த சகலரும் தலவத்கொடையில் உள்ள அமைச்சரின் வீட்டில் அமைச்சரை சந்தித்து கரங்கா வட்டை விடயம் அடங்கலாக முக்கிய பல விடயங்களை கலந்துரையாடினர். விவசாயம் செய்ய சென்ற விவசாயிகள் விரட்டப்பட்ட சம்பவங்கள், காணிப் பத்திரங்கள் இருந்தும் அத்துமீறும் செயடற்பாடுகள் தொடர்பில் விளக்கி இதனால் அம்பாறை முஸ்லிங்கள் மத்தியில் ஒரு பதட்டம் நிலவுவதாகவும் விவசாயிகள் மன வேதனை அடைந்துள்ளதாகவும் கூறி இது தொடர்பில் பொலிஸாருக்கு உத்தர விட்டு சுமூகமான தீர்வை பெற்றுத்தர கேட்டுக் கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை தொடர்பு கொண்ட அமைச்சர் சரத் வீரசேகர, அத்து மீறிய குழுவினருக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுத்து சட்டவிரோத குழுவை அகற்றி நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார். மு.கா. சம்மாந் துறை இளைஞர் முக்கியஸ்தர் காதிக் இப்ராஹிம் வீட்டில் வைத்து விவசாயிகளை சந்தித்த ஹரீஸ் எம்.பி விடயம் தொடர்பில் கலந்துரையாடியதுடன் அம்பாறை அரசாங்க அதிபரின் தலைமையில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டு இரு தினங்களுக்குள் தீர்வு கிடைக்க வழியேற்படுத்தப்படும் என உறுதியளித்தார். அதன் பின்னர் எம்.பிக்களான ஹரீஸ், பைசால் காசிம், ஆகியோர் இது விடயமாக கலந்துரையாடி சம்மாந்துறை தவிசாளர் ஏ.எம். நௌஸாத் அவர்களின் ஆலோசனைகள் தொடர்பிலும் கலந்துரையாடி அரசாங்க அதிபருடனான கலந்துரையாடல் இடம்பெற வேண்டும் என்று தீர்மானித்தனர்.

ஹரீஸ் எம்.பி அரசாங்க அதிபரை தொடர்புகொண்டு இந்த பிரச்சினையை இன்னும் காலம் தாமதிக்காமல் அவர்களின் விதைப்பு காலம் ஆரம்பிக்கவுள்ளதால் இதுதொடர்பில் ஆராய்ந்து தீர்வைப் பெறும் உயர்மட்ட கலந்துரையாடலை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அடுத்த நாள் மாலை 5 மணியளவில் சகல அதிகாரிகளையும் தான் அழைப்பதாகவும் ஏனைய பிரதிநிதிகளை ஹரீஸ் எம்.பி யே அழைத்துவருமாறும் கூறி அந்த கூட்டத்தில் வைத்து தீர்வை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். இதே நேரம் ஹரீஸ் எம்.பி. நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஸவின் கவனத்திற்கு இவ் விடயத்தை கொண்டு சென்று அம்பாறை எம்.பிக்கள் இந்த விடயத்தில் தலையிடாமல் தவிர்க்கும் ஏற்பாடுகளை செய்தார்.

அடுத்தநாள் செவ்வாய்கிழமை கூட்டம் நடக்கும் இடத்திற்கு செல்ல முன்னர் சம்மாந்துறை தவிசாளர் ஏ.எம்.நௌசாத் அவர்களின் தலைமையில் அவரது அலுவலகத்தில் கூடிய ஹரீஸ் எம்.பி, பைசால் எம்.பி, முஷாரப் எம்.பி, சம்மாந் துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம். ஹனீபா, சட்டத்தரணிகளான நஸீல், யூ.கே. சலீம், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அந்த கூட்டத்தில் எவ்வாறு நடந்து கொள்வது என்று கலந்துரையாடினார்கள். அதில் சம்மாந்துறை தவிசாளரே கரங்கா வட்டையின் வரலாற்றை எடுத்துரைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணிக்கு அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் எல்லோரும் சிறப்பாக தமது பணியை செய்தனர். தவிசாளர் நௌசாத் வரலாற்றை தெளிவாக விளக்கினார். எமது




எம்பிக்களும் இதில் உள்ள நியாயங்கள், முஸ்லிம் சிங்கள மக்களின் ஒற்றுமை சகவாழ்வின் அவசியம் தொடர்பில் இங்கு பேசினர். இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் இந்த கூட்டம் நடக்க முன்னர் மூன்று மணித்தியாலயங்கள் இது விடயமாக அத்துமீறியவர்களுடன் கலந்துரையாடியதாகவும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாவும் இனிமேல் நிம்மதியாக விவசாயம் செய்ய விவசாயிகள் காணிக்கு செல்ல முடியும் என்று உறுதியளித்தார். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் நாளை முதல் விவசாயத்தை செய்ய கரங்கா வட்டைக்கு செல்லுமாறு விவசாயிகளை கேட்டுக்கொண்டதுடன் பாதுகாப்பு வழங்குவதாகவும் உறுதியளித்தார். கூட்டம் மகிழ்வுடன் நிறைவுக்கு வந்தது. ஆனாலும் பிரச்சினை முடிவுக்கு வரவில்லை.

அரசாங்க அதிபரின் தலைமையிலான கூட்டம் முடிவடைந்து அடுத்த நாளே பிரச்சினைக்கு தீர்வுகண்டவர் யார் எனும் பெயர்வைக்கும் படலம் ஆரம்பமானது. முகப்புத்தக எழுத்தாளர்கள் முஷாரப் தான் ஹீரோ என்றும் ஹரீஸ் தான் ஹீரோ என்றும் புகழ் பாடிக்கொண்டிருந்தது மாத்திரமின்றி விடிந்தும் விடியாததுமாக மக்கள் காங்கிரசின் சார்பிலான திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் களவிஜயம் செய்து நிலைமையை கண்காணித்து கொண்டிருந்த போது மீண்டும் வேதாளம் முருங்கை மரம் எரிய கணக்காக பௌத்த தேரர் தலைமையிலான சிங்களவர்கள் கரங்கா வட்டை காணிக்குள் வந்து பிரச்சினையை ஆரம்பித்தனர். பொலிஸில் முறைப்பாடானது. மீண்டும் பிரச்சினை தொடக்கப்புள்ளியை வந்தடைந்துள்ளது.

கடந்த நல்லாட்சியில் சம்மாந்துறை தொகுதியில் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் எம்.ஐ.எம். மன்ஸூர், ஆளும் தரப்பு எம்.பி எஸ்.எம்.எம். இஸ்மாயில் என இரண்டு எம்.பிக்கள் இருந்தனர். மாத்திரமின்றி அம்பாறையில் இராஜாங்க அமைச்சர்களான பைசால் காசிம், ஹரீஸ் என இருவர் இருந்தனர். போதாக்குறைக்கு ஏ.எல். எம். நஸீரும் எம்.பியாக இருந்தார். ஆளும்தரப்பின் நிழல் பிரதமராக சுமந்திரனும்,ஹக்கீமும்இருந்தார்கள் என்பதுதான் வெளிப்படையான உண்மை. முன்னாள் அமைச்சர் றிசாத் பலமான ஒருவராக அந்த காலத்தில் இருந்தார். அவரை நம்பி 33000 க்கும் அதிகமான வாக்குகளை அம்பாறை மாவட்டம் வழங்கியிருந்தது. இந்த பிரச்சினைக்கான தீர்வை ஹக்கீமும், றிஷாத்தும், அம்பாறை மாவட்ட முஸ்லிம் எம். பிக்களும் அப்போதே செய்திருக்க முடியும். வாய்ப்பிருந்தும் முஸ்லிம் தலைமைகள் தவறவிட்ட தருணமது.

இந்த கோத்தா அரசில் ஆளும்தரப்பு பங்காளியாக மிக நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட ஏ.எல்.எம். அதாஉல்லா இருக்கிறார். அமைச்சர் பதவியை விட மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதே இலக்கு எனும் அவர் இவ்விடயத்தில் கரிசனை செலுத்த முன்வர வேண்டும். முஸ்லிங்களின் உரிமைகளை, உடமைகளை பாதுகாக்க அரசுக்கு ஆதரவாக இருந்து வரும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், பைசால், முஷாரப் ஆகியோர் இந்த விடயத்தில் இன்னும் சிரத்தையெடுத்து போராட முன் வரவேண்டும். சம்மாந்துறை மக்களின் வாக்குகளினால் பாராளுமன்ற ஆசனத்தை அலங்கரிக்கும் இந்த நால்வரும் சம்மாந்துறை மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதே வாக்களித்த மக்களுக்கு நீங்கள் செய்யும் கைமாறு.

இரத்தக்கறை படிந்த கரங்கா வட்டையில் இனமோதல்கள் உருவானது எனும் வரலாற்று துயரை எதிர்காலம் பேசாமல் காக்க ஒற்றுமை எனும் கயிறு பலமாக இங்கு பிடிக்கப்பட வேண்டும்.

# உயிரிலும் மேலான அல்லாஹ்வை இழிவுபடுத்திய கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு இறுதி எச்சரிக்கை!

## முனாஜித் மௌலவி அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி: வெளியிடப்பட்டகாணொலிகளில் கூடுதலான முதுரசாக்கள் இருந்து கைப்பற்றப்பட்டது. எனவே இவ்வாறான மூலச்செலவுகளை செய்கின்ற நடவடிக்கைகள் தானே மேற்கொள்ளப்பட்டிருந்தது.**

பதில் : அல்ஹாவோ அக்பர் என்று சொல்வது இன்சா அல்ஹா என்று சொல்வது நல்லவற்றிற்காகப் பயன்படுத்துவது. தீயனவற்றுக்காக பயன்படுத்தப்படுவதல்ல. ஆனால் தீயதற்கு தீயவர்கள் சொல்கின்றார்களே தவிர நல்லவர் சொல்வதில்லை. உதாரணமாக சிலர் சொல்லாமல் பிழையை செய்கின்றார்கள். இந்த மண்ணில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தீவுப்பகுதியில் எங்களுக்கு ஒரு தனி நாடு கேட்டோமா இல்லையா. வடகிழக்கு பிரித்து கேட்டோம் ஏன் கேட்டோம் ஆள்வதற்கு இவர்கள் தகுதியற்றவர்கள் எங்களுக்கு கேட்கும் உரிமைகளை தரமாட்டார்கள். ஆயுதம் தூக்க வேண்டி வந்ததா இல்லையா. ஆயுதத்தினால் என்ன நடக்கின்றது கொலை நடக்கின்றது. இன்னொரு ஆத்மாவை ஒரு மண்ணுக்காக கொலை செய்ய சொல்லி இந்து மதம் சொல்கின்றதா?. கிறிஸ்தவ மதம் சொல்கின்றதா?. எந்த மதமும் சொல்லவில்லை என்னும் பொழுது ஏன் செய்தார்கள் சுதந்திரத்திற்காக அடுத்தவரை கொலை செய்வதா. இந்த நாட்டுக்காக அல்ஹாவோ அக்பர் என்று சொல்லிக்கொண்டு ஒருவரை கொலை செய்வது பிழையா இல்லையா அது பிழை. நாம் அதை சரிகாணவில்லையே அது நூற்றுக்கு நூறு வீதம் பிழை.

**கேள்வி : உங்களைப்போன்ற மௌலவிகள் நீங்கள் ஒரு உபதேசத்தை குறிப்பிட்ட மதரசாக்களிலும் வளர்ந்துவரும் இந்த முஸ்லிம் சமுதாயத்திடமும் நீங்கள் எடுத்துக்கூறினால் அது தவறா?**

பதில் : தாராளமாக சொல்கின்றேன். சரியை நான் செய்தால் யார் சொன்னாலும் கேட்டுக்கொள்வேன். பிழையை யார் செய்தாலும் அது என்னுடைய பாணி இந்த பள்ளிவாசலுக்கு முன்னால் 20 நாள் குழந்தையை எரித்தார்கள் அதற்கு நான் என்ன உதாரணம் சொன்னேன் தெரியுமா முள்ளிவாய்க்காலிலே பச்சைக்குழந்தைகளை பொஸ்பரஸ் குண்டுகளை போட்டு கொண்ட உங்களுக்கு எப்படியடா இந்த 20 நாள் குழந்தையின் பெறுமதி தெரியப்போகின்றது என்று சொன்னேன். நான் சொல்லவந்த விடயம் என்னவென்றால் பிழையை யார் செய்தாலும் பிழை. அல்ஹாவோ அக்பர் என்று முஸ்லிம் அரபுச்சொல்லை சொன்னதனால் அது சரியாகிவிட முடியாது. பௌத்த மதத்தில் இங்கு மாடு அறுக்ககூடாது ஆடறுக்க கூடாது கோழியை அறுப்பது எல்லாம் உயிர்பலி கூடாது மனிதர்களை கொல்லலாமா?. சரி இலங்கையில் தமிழ் தேசியம் தமிழீழ விடுதலைப்புலிகள் குண்டு வைத்தார்கள் ஆட்களை கொன்றார்கள் என்பதற்காக பிழைக்கு தீர்வு இன்னொரு பிழையா. இல்லை இவர்கள் எப்படி கொன்றார்கள் முள்ளிவாய்க்காலிலே மக்களை கொல்லவில்லையா. என்னுடைய பார்வையில் உலகின் வளத்துக்காக வேண்டி இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களை யார் செய்தாலும் பிழைதான்.

**கேள்வி : அப்படியிருந்தால் தமிழ் பேசும் மக்கள் என்று கூறினீர்கள். சிங்கள இனம் தமிழினத்திற்கு எதிரான ஒரு போரை கட்டவிழ்த்துவிடுகின்ற பொழுது இந்த முஸ்லிம் தரப்புகள் அனைத்துமே சிங்கள தரப்புடன் இணைந்து தானே செயற்பட்டது. அன்று அஷ்ரப் அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பிலே இணைந்திருந்தார். ஏன் அதனை நாங்கள் ஒன்றாக இணைந்து அரசை எதிர்த்து எங்களுக்கான சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடியாது?**

பதில் : நல்ல கேள்வி. இலங்கையை பொறுத்தவரையில் உலகமே தேவையில்லை இந்த உலகம் அழிந்துவிடும் உலகத்தினுடைய பொருட்களே தேவையில்லை என்று இருக்கின்ற எனக்கு வடக்கை பிரித்துதா கிழக்கை பிரித்துதா என்பது முட்டாள்தனம் என்று நான் சொல்லுகின்றேன். மூன்றே மூன்று இடங்களுக்காக வேண்டிதான் நாங்கள் யுத்தம் செய்ய முடியும். ஒன்று மக்கா. மதீனா. இன்று யுத்தம் நடந்துகொண்டிருக்ககூடிய பலஸ்தீன் ஆகிய இந்த மூன்று இடங்களை தவிர வேறு எந்த இடத்திற்காகவும் இனத்திற்காகவும் பேராடக்கூடாது என்பது பாரதத்தினுடைய முடிவு. இருக்க வேண்டும் நன்மையை சொல்ல வேண்டும் கேட்டால் செய். கேட்காவிட்டால் ஒதுங்க வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் தேசியம் வடகிழக்கை எங்களுக்கு பிரித்து தரும்படி கேட்டபொழுது நாங்கள் இங்கு மக்களுடன் இருக்கின்றோம் அந்த கருத்திற்கு நாங்கள் உடன்பட வில்லை ஆனால் சிங்கள மக்களால் நாங்கள் அநியாயம் செய்யப்பட்டோம். தமிழ் பேசுபவர்களுக்கு அநியாயம் செய்யப்பட்டோம். முதல் கட்டமாக தமிழ் தேசிய மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இரண்டாம் கட்டமாக அவர் நேரடியாக இன்று முஸ்லிம்களை தாக்குகின்றார்கள். எனவே ஒரு வரலாற்று தவறாக நான் சொல்லுகின்றேன் பிரச்சனையிலிருந்து தவிர்ந்து தனியாக வாழ்வதற்காக வடகிழக்கை பிரித்துதரும்படி கேட்டபொழுது நாம் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்திருக்க வேண்டும் என்பது வாஸ்துவம். முஸ்லிம்கள் சேரவில்லை நான் சேரவில்லை ரவூப் ஹக்கீம் சேரவில்லை அரசியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் சேரவில்லை கருணா அம்மான் பிரபாகரனுடன் சேர்ந்தாரா இல்லையா. என்ன நடந்தது வெற்றி கண்டீர்களா? பிரிந்தார்கள் ஏன் பிரித்தார்கள்.

தமிழ் தேசியம் தமிழீழம் விடுதலை கேட்டுக் கொண்டிருக்கின்றது தரமாட்டோம் என்றும் ஒன்று இருக்கின்ற பொழுது முஸ்லிம்கள் அப்பொழுது தனி சமூகமாக இருந்தபொழுதும் அரசி யல் தலைமைத்துவம் இருக்கவில்லை. ஆன்மீகத் தலைமைத்துவம் இருக்கவில்லை. அப்படி இருந்தது எல்லாம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருந்தபொழுது முஸ்லிம்களுக்கு ஒட்டுமொத்த என்று தனி அலகு இருக்கவில்லை. தனித் தலைமைத்துவம் இல்லை ரவூப் ஹக்கீமை மட்டும் பேசினார்கள். அந்தகட்டத்தில் ரவூப் ஹக்கீமை எதிர்த்தவர்கள் இல்லை லயா இருந்தார்கள். எனவே ஒரு நீண்ட தூரசமூகத்தை மனிதர்களை நோக்கி ஒரு தீர்வை நோக்கி போகும்பொழுது கண்டிப்பாக நன்றாக யோசித்து எடுக்க வேண்டும். நான் அண்மையில் ஒரு சர்ச்சையில் சதாமுசைன் செய்தது இந்த சமூகத்திற்கு பெரியதொரு அநியாயம் என்று கூறினேன். சதாமுசைன் ஈராக் நாட்டு மக்களின் பில்லாதீன் என்று சொல்லக்கூடிய சவுதி அரேபியாவில் இருந்த ஒரு பில்லாதீன் அவர் அங்கு இருந்து கொண்டு இன்னுமொரு பிரச்சனையை செய்துவிட்டு ஓடிவந்து ஆப்கானிஸ்தானில் ஒழிந்திருக்கின்றார். ஆப்கான்கள் கொல்லப்பட்டார்களா இல்லையா ஆப்கான்கள் பில்லாதீனை தேடி எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் இந்த சமூகத்தின் மீது அக்கறை கொண்டவராக பில்லாதீன் இருந்திருந்தால் என்ன செய்திருக்க வேண்டும் நான் தானே வேண்டும் நான் வருகின்றேன் இந்த மக்களை கொல்லாதீர்கள் என்று சொல்லியிருக்க வேண்டும் ஆனால் சதாமுசைன் ஒழிந்திருந்தார் எப்பொழுதும் எங்களுக்கு என்ன பலம் இருக்கின்றதோ அந்த பலத்தை வைத்துக்கொண்டு தான் நாங்கள் சண்டைக்கு போக வேண்டும்.

**கேள்வி : இப்பொழுது சிறுபான்மைக்கு எதிராக முஸ்லிம்களும் தமிழர்கள் அனைவருமே சிறுபான்மையினம் என்று சொல்லி அடிமைப்படுத்துகின்ற இனமாக தற்பொழுது களகொட ஞானசார தேரர் கோட்டபாய ராஜபக்சவினுடைய அரசு எல்லாமே செயற்படுகின்றது. இவ்வாறான அடக்குமுறைகள் ஏற்படுகின்ற பொழுது ஒரு இறைவனை நிந்திக்கி ன்றதான செயற்பாட்டை இந்த அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது இன்று ரிஷாட் பதியூதின் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார். அசாத்சாலி சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார். அசாத்சாலியின் தம்பி அடைக்கப்பட்டிருக்கின்றார் இவ்வாறெல்லாம் ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் தனக்குள்ளே இந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளை வைத்திருந்தது. வைத்திருந்து தனது அரசியல் வேட்டையை முடித்த பிற்பாடு இன்று முஸ்லிம்கள் மீது தனது போரை தற்பொழுது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இதனை நீங்கள் இனியாவது ஒரு சமுதாயமாக ஒரு குடையின் கீழ் செயற்படுவதற்கான முன்னெடுப்புக்களை தமிழ் தேசிய கூட்டமைப்புடனோ அல்லது ஏதோவொரு தமிழ் யுனிட்டுடன் இணைந்து செயற்படக்கூடாது?**

பதில் : தாராளமாக செயற்படலாம் செயற்படுவதில் இரண்டு கருத்து கிடையாது. ஆனால் முதன் முதலில் எடுத்ததும் சாணக்கியன் ஐயாவின் நல்லதை பொத்துவில் முதல் பொலி-கண்டி வரை என்று ஒரு பயணத்தை தொடங்கிக்கொண்டு வந்தார்கள். அதில் அனைவருமே பேசியிருந்தார்கள் வடகிழக்கு இணைப்பு பற்றி சாணக்கியன் என்ன சொல்கின்றார் என்று தான் அனைவருமே கேட்டார்கள். முதலாவதாக உள்ளங்கள் ஒன்றுபட்டால் கஷ்டமான விடயங்கள் பற்றி இலகுவாக பேசி தீர்மானிக்கலாம் உள்ளம் முரண்பட்டால் இலகுவான விடயங்கள்கூட கஷ்டமாக இருக்குமா இல்லையா கஷ்டமாக இருக்கும் இவர்கள் வடகிழக்கு இணைப்பு பற்றி தான் முதலில் பேசுவது அல்லது கரையோர பிரதேசங்களைப் பற்றி பேசுவது. எது தமிழ் மக்களுக்கிடையிலே அல்ஹாவை வணங்குபவர்களுக்கும். கிறிஸ்தவர்களாக இருப்பவர்களுக்கும் சைவர்களாக இருப்பவர்களுக்கும் என்ன பிரச்சனை வருமோ அந்த பிரச்சனைகளை முதலில் தூக்கி போட்டுவிட்டு அந்த பயணத்தை தடைப்படுத்துவது. அழகான தலைமைத்துவம் ஒன்று வேண்டும் அதில் தமிழ் பேசுகின்ற கொள்கை மாறாதவர்கள் தலைவர்களாக வரவேண்டும். தேர்தலில் ஒரு பேச்சு அபிவிருத்தியில் ஒரு பேச்சு பேசுகின்ற எவரும் வரக்கூடாது.

இனிமேல் அடுத்தகட்ட இன்சா அல்ஹா இறைவன் உயிருடன் இருந்தால் இந்த கொள்கையை விட்டுக்கொடுக்கின்ற எவரையும் பாராளுமன்றம் அனுப்புவதற்கே முஸ்லிம் மக்கள் தயாராகமாட்டார்கள் என்ற அதற்குரிய பிரச்சாரங்களை தான் நாங்கள் தற்பொழுது செய்து கொண்டிருக்கின்றோம். ஒருபொழுதும் நாங்கள் தமிழ் மக்கள் தந்தை செல்வாவிற்கு பின்னால் எங்களுக்கு யுஎம்பியில் குலேந்திரன் ஐயா இருந்தார் அழகான முறையிலே எங்களது ஊரில் பல பேருக்கு ஜீஎஸ் வேலைகளை கொடுத்ததும் அவர்கள் தான் உள்ளங்கள் நல்லா இருந்தது தெளிவாக இருந்தது நாங்கள் கடும் ஒற்றுமையாக இருந்த ஆட்கள். இன்றும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம். கடல் நீரை கரண்டியால் அள்ளுவதை போன்று கஷ்டமாக இருக்கின்றது இந்த ஒற்றுமையை பற்றி பேசுவது. எனவே அழகான ஒரு தலைமைத்துவம் வரவேண்டும். அது விலைபோகாத அபிவிருத்திகளை கண்டு மடங்காத ஒரு தலைமைத்துவம் வேண்டும் இன்சா அல்ஹா இறைவன் நாடினால் அது வெகு விரைவில் வடகிழக்கு இணைந்துகொண்டு நாங்கள் கனவு கண்டு நல்லதொரு பூரண சுதந்திரமான ஒரு வாழ்க்கையை வாழலாம் வாழ வேண்டும்.

**கேள்வி : நீங்கள் மௌலவி என்ற ரீதியிலே இந்த கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிரான நடவடிக்கைகளை மௌலவிகள் இணைந்து அல்லது இதற்கான ஒரு தீர்வு என்ற வகையில் எப்படி அதை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கின்றீர்கள்?**

பதில் : சமுதாயத்திற்கு ஒரு தகவலை சொல்கின்றோம் அவர் ஒரு பைத்தியக்காரன். ஒரு பைத்தியக்காரன். வெறிபிடித்தவன். நல்லதே வாயில் வராத ஒருவருக்கு அவரிடம் போய் நீதி கேட்பது அவர்களை வைத்து செயற்படுத்தக்கூடிய ஒரு தலைமையிடம் போய் நீதி கேட்பது எந்த வித அர்த்தமும் இல்லை. யாரை பேசினார் தெரியுமா இந்த உலகத்தையே ஆட்சி செய்யக்கூடிய உலகத்தை படைக்கின்ற மறுமைக்கும் சொந்தக்காரனான அல்ஹாவை இறைவனை பேசியிருக்கின்றார்.

அந்த இறைவன் இவருக்கு தண்டனை கொடுப்பார். ஞானசாரதேரர் அல்ஹாவை பேசியிருக்கின்றார் எனவே அல்ஹா இடத்திலேயே பொறுப்புசாட்டுகின்றோம் கண்டிப்பாக இந்த ஞானசார தேரருக்கு தண்டனையை கொடுப்பதற்கு இறைவன் போதுமானவன் என்ற நிறைந்த நம்பிக்கை இருக்கின்றது.

நேர்காணல் : இரணியன்

# ஆயுதம் ஏந்தி போராடும் நிலையில் தற்பொழுது உள்ள இயக்கங்கள் இல்லை

## ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி...

ஆகவே இந்த நிலையில் தமிழ் மக்களினுடைய தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு எட்டப்படவில்லை. ஆகவே அது எட்டப்பட வேண்டும் அதற்கு இந்தியாவினுடைய உதவிகள் முக்கியம் என்று நாங்கள் கருதினால் முதலில் எங்களுக்குள் ஒரு உடன்பாட்டை மேற்கொள்ள வேண்டும். இந்தியாவுடன் என்ன பேசப்போகின்றோம் என்ன கோரிக்கைகள் முன்வைக்கப்போகின்றோம் இந்தியா இது தொடர்பாக என்ன கருத்துக்களை கொண்டிருக்கும் இதை எவ்வாறு நாங்கள் கையாளப்போகின்றோம் பல விடயங்கள் எங்களுக்குள் பேசப்பட்டு வரவேண்டும் ஆனால் இது அப்படியில்லை. இவர்களை பொருத்த வரை ஒரு பாராளுமன்றத்தை அல்லது ஒரு மாகாணசபையை உள்ளுராட்சி சபைகள் போன்று ஒரு அரசியல் இடங்களாக பார்க்கப்படுகின்றதே தவிர தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வாகாது.

உண்மையாகவே ரெலோ புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சிகள் போன்ற நாங்கள் எல்லோருமே ஆயுதம் எடுத்து போராடுகின்ற பொழுது கொள்கைக்காக ஒரு இலக்கை நோக்கி நாங்கள் பயணித்தவர்கள். பதவிகளுக்காக அல்ல யாரும் இதில் இறந்துபோயிருக்கலாம் மீதியாக இருப்பவர்கள் கூட அவர்களுக்கு கிடைத்த ஒரு போனஸ் என்ற வகையில் தான் அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என சொல்லலாம். அப்படியிருக்கின்றவர்கள் கூட இதைப்பற்றி இன்னமும் சிந்திக்காது இருப்பது அல்லது தங்களுடைய குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக காய்களை நகர்த்த முனைவது என்பது ஒரு அர்த்தமற்ற செயலாக இருக்கலாம்.

ஆகவே அனைவரிலும் மாற்றங்கள் வேண்டும்மிகவும்மோசமானநிலையில் தமிழரசுக்கட்சி இருக்கின்றது அது உள் வீட்டு பிரச்சனை மட்டுமல்ல இந்த விடயங்களில் தான் தான் ஒரு தாட்கட்சி தன்னால் தான் ஏலும் என்று சொன்னாலும்கூட இவ்வளவு காலத்தில் அவர்களால் எதனையும் செய்ய முடியவில்லை என்பது தான் உண்மையான விடயம்.

அவர்கள் ஜெனீவாவிற்கு போனோம் வந்தோம் என்று கூறலாம் அல்லது புதிய அரசியல் சாசனத்திற்கு அறிக்கை கொடுத்தோம் என்று கூறலாம். இந்த 12 ஆண்டு காலத்தில் இதனால் நீங்கள் எதைப் பெற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். மாவட்டத்தில் இருந்து இராணுவத்தை குறைக்க முடிந்ததா. காணிகளை காப்பாற்ற முடிந்ததா. காணாமல் போனவர்களுக்காக செய்யப்பட்டதா. அரசியல் கைதிகளை விடுவிக்க முடிந்ததா. இறுதியாக நீங்கள் கணக்கு வழக்குகளை பார்க்கும் பொழுது நீங்கள் கடந்த 12 வருட காலங்களுக்குள் என்ன சாதனைகளை செய்திருக்கின்றோம். எவற்றை பெற்றுக் கொண்டிருக்கின்றோம் என்று கேட்டால் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது தான் உண்மையான விடயம்.

யார் வேண்டுமானாலும் பட்டியல் போடலாம் ஜெனீவாவிற்கு போய்வந்த பட்டியல் அல்லது எத்தனை கடிதங்களை எழுதியிருக்கின்றேன் அல்லது எத்தனை முறை அரசாங்கத்தை சந்தித்திருக்கின்றேன் என்றெல்லாம் பட்டியல் போடலாம். ஆனால் நீங்கள் எவற்றை செய்திருக்கின்றீர்கள் என்று பார்த்தால் எதனையுமே செய்யவில்லை. ஆகவே அதற்கு பின்னராவது பெரிய தத்துவங்கள். பிலோசபி எல்லாம் பேசக்கூடியவர்கள் தற்பொழுதாவது யோசிக்க வேண்டும் நாங்கள் தவறிழைத்துக்கொண்டிருக்கின்றோம் ஆகவே நாங்கள் அமர்ந்து பேசி தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை எட்டக்கூடிய வகையில் செயற்படவேண்டும் என அவர்கள் சிந்திக்க வேண்டும். என்னைப்பொறுத்தவரையில் அவ்வாறான விடயங்களுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப் எப்பொழுதும் தயாராக இருக்கின்றது என்பதைத் தான் அது யார் தொடங்கினாலும் செயற்படுவதற்கு தயாராக இருப்போம் என்பதனை சொல்ல விரும்புகின்றேன்.

**கேள்வி : த.தே.கூ இணைந்தது அல்லது விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டது என்றால் அது எந்த நோக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது?**

பதில் : அன்று விடுதலைப்புலிகள் ஒரு பலம்வாய்ந்த சக்தியாக இருந்தார்கள். பலம் மிகுந்த சக்தியாக இருந்த பொழுது அவர்களுக்கு ஒரு அரசியல் ரீதியாகவும் விடயங்களை கையாள வேண்டியிருந்தது. அப்பொழுது தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக செயற்பட்டு பாராளுமன்றத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆகவே அந்த வகையில் அவர்கள் தனித்தும் இவர்கள் தனித்தும் செயற்படுவது என்பது சரியாக இருக்காது. எனவே நாங்கள் ஒரு கூட்டாக செயற்படவேண்டும் என்ற அடிப்படையில் தான் த.தே.கூ என்பது உருவாக்கப்பட்டது. ஆகவே விடுதலைப்புலிகளினுடைய அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டது இரண்டு பேரும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற அடிப்படையில் அது உருவாக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிட்டார்கள் ஆனால் த.தே.கூ இருக்கின்றது.

த.தே.கூ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் இருந்து தமிழீழத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதல்ல. ஏனென்றால் அவர்களுக்கு இருந்த பேரம் பேசும் ஆற்றல் தற்பொழுது இல்லை. ஏனென்றால் அப்பொழுது வலுவான ஒரு ஆயுத பலம் இருந்தது அந்த ஆயுத பலம் தற்பொழுது இல்லை. ஆகவே பேரம் பேசும் ஆற்றல் இல்லா தபட்சத்தில் தற்பொழுது சமஷ்டி பற்றி பேசப்படுகின்றது.

ஆனால் சமஷ்டியை கிடைக்க வைப்பதற்கு நாங்கள் என்ன காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கி ன்றோம் என்பது தான் கேள்வி அந்த விடயங்களை சாதிப்பதற்கு அதனை முன்னெடுப்பவர்கள் என்ன விதமான கரிசனையுடன் அந்த விடயங்களை கையாளுகின்றார்கள் என்று பார்த் தால் இன்னும்கூட அங்கு ஒரு மூன்று கட்சி இங்கு ஒரு இரண்டு கட்சி அங்கு ஒரு கட்சி என்ற மாதிரி இன்னும் அவர்கள் தங்களது பாராளுமன்ற மாகாணசபை ஆசனங்களைப்பற்றி தான் யோசிக்கின்றார்களே தவிர உண்மையாகவே தமிழ் மக்களினுடைய விடயங்கள் பற்றி யோசிப்பதாக இருந்தால் அந்த சிந்தனைகளில் மாற்றம் வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அது வொரு காத்திரமான பேச்சு வார்த்தைகள் என்பது இவர்கள் மத்தியில் தேவை.

**கேள்வி : இறுதியாக கொரோனா வைரசினுடைய தாக்கம் தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

பதில் : கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள ஒரு பிரச்சனை அது இலங்கைக்குரிய பிரச்சனையல்ல. ஆனால் இலங்கை அரசாங்கம் இன்னும் சிறப்பாக இதைக் கையாண்டு இருக்க லாம் என்ற ஒரு கருத்து இருக்கின்றது. இலங்கையினுடைய வைத்திய நிபுனர்கள் இலங்கையினுடைய சுகாதார பிரிவு போன்றவை இலங்கை ஜனாதிபதிக்கு பல்வேறு கடிதங்களை பல்வேறுபட்ட அழுத்தங்களை கொண்டுவந்திருக்கின்றது இது எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்று. ஆனால் இந்தவருடம் இது கையாளப்பட்ட பொழுது நிச்சயமாக நிபுனர்களோ சுகாதார பிரிவோ சொன்ன விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மாறாக இராணுவத்தினரின் ஒரு ஒத்துழைப்புடன் அவர்களே முடிவெடுத்து அவர்களே செயற்படுத்தும் ஒரு போக்கை காணக்கூடியதாக இருந்தது. அதனால் இங்கு பல்வேறுபட்ட கொரோனா கொத்தணிகள் உருவாக்கப்பட்டது. அது மிகவேகமாக வலுவிழந்து ஒரு கட்டத்தில் 2 கோடி 20 இலட்சம் மக்கள் உள்ள ஒரு நாட்டில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட கொரோனா கேசுகளும் ஆயிரக்கணக்கானவர்கள் இறப்பதற்கான நிலைமைகளும் வந்து உருவாகின. அதில் முக்கியமாக இலங்கை அரசாங்கம் இந்த கொரோனா சம்பந்தமான சரியான திட்டமிடல்கள் சரியான பார்வைகள் நிபுனர்த்துவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமை போன்ற பல காரணிகளால் மோசமான நிலைக்கு வந்தார்கள்.

அந்த மோசமான நிலைமை என்பது ஒன்று ஏற்கனவே மிக மோசமான நிலையில் உள்ள பொருளாதாரம் என்பது கொரோனா காரணி காரணமாக இன்னும் மோசமான நிலைக்கு போனது. கூலி ஆட்களுக்கு வேலையில்லை. என்பது உட்பட சாப்பாட்டுக்கு வழியில்லை. பஞ்சம். இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டன.

பொருட்களை கடைகளில் வாங்க முடியாமை. சகலதுக்கும் விலையேற்றம் போன்ற பல பிரச்சனைகள் தற்பொழுது இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் சாதாரண பிரச்சனைகள் அல்ல. அரிசியினுடைய விலை 90 ரூபாவிலிருந்து 150 ரூபாய் வரை போய் விட்டது. அதைப்போன்று 200 ரூபாய் 300 ரூபாய் விற்ற மஞ்சள் 13 ஆயிரம் ரூபாயாகிவிட்டது. உளுந்து 500 ரூபாய் 600 ரூபாவிற்கு விற்றப்படுகின்றது. சீனி 200 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பின்னர் 150 ரூபாவாகியது இப்படி பல்வேறுபட்ட அளவில் இந்த விடயங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆகவே இது ஆரோக்கியமான சூழல் என்பதல்ல நிச்சயமாக கொரோனா நிற்கக்கூடிய அல்லது கொரோனா தொற்றுகளில் மாற்றம் நிலவி நாடு ஒரு நிலைக்கு வந்தாலும் கூட பொருளாதார முடக்கங்கள் என்பது இதிலிருந்து இலங்கை வெளியில் வருமா என்று பாரியதொரு கேள்வி இருக்கின்றது. அந்தளவு மோசமான நிலைக்கு இலங்கை போயிருக்கின்றது. அதற்கு இலங்கையினுடைய வெளிவிவகாரக் கொள்கை ஒரு காரணம் இலங்கையினுடைய பொருளாதார கொள்கை ஒரு காரணம் இலங்கை கொரோனா விடயங்களை ஒழுங்காக முகாமைத்துவம் செய்யவில்லை என்பது இன்னுமொரு காரணி. இந்த காரணங்களால் இன்று இலங்கையினுடைய பொருளாதாரம் என்பது மிகமிக மோசமான நிலைமைக்கு போயிருக்கின்றது. இதிலிருந்து இலங்கை மீள்வது என்பது இலகுவான காரணிமல்ல.

**இரணியன்**



# உலக பார்வை



## 2021ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மாநாட்டில் கலந்துக் கொள்வதாக ஆஸி பிரதமர் அறிவிப்பு!

கடுமையான விமர்சனங்களுக்கு பிறகு அவுஸ்ரேலியாவின் பிரதமர் ஸ்கொட் மோரிசன், 2021ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மாநாட்டில் கலந்துக் கொள்வதை உறுதிசெய்துள்ளார்.

உலகளாவிய தலைவர்கள் அடுத்த மாதம் கிளாஸ்கோவில் கூடி, அதிகரித்து வரும் உலக வெப்பநிலையை தடுப்பதற்கான புதிய ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

நிலக்கரி மற்றும் எரிவாயுவை அதிக அளவில் உற்பத்தி செய்யும் அவுஸ்ரேலியா, வலுவான காலநிலை நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய அழுத்தத்தில் உள்ளது.

இதனிடையே பிரதமர் ஸ்கொட் மோரிசன், கடந்த மாதம் கூட்டத்தை தவிர்க்கலாம் என கூறிய போது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகினார்.

இதனைத்தொடர்ந்து அன்று (வெள்ளிக்கிழமை) ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மாநாட்டில் கலந்துக் கொள்வதை உறுதிப்படுத்தினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'கிளாஸ்கோ உச்சிமாநாட்டில் நான் கலந்துகொண்டதை உறுதிசெய்தேன். அதில் நான் கலந்து கொள்ள காத்திருக்கிறேன். இது ஒரு முக்கியமான நிகழ்வு' என கூறினார்.



## நேபாளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்து: 32 பேர் பலி

நேபாளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேபாளத்தில் நேபாள்குஞ் பகுதியில் இருந்து கம்கதி நோக்கி பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று முகுல் மாவட்டம் அருகே திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து, தாறுமாறாக ஓடி அருகிலுள்ள பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 22 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 10 பேர் மருத்துவமனையில் உயிரிழந்ததை தொடர்ந்து பலி எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது.

நேபாள இராணுவத்தினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் இருந்து தசரா பண்டிகையைக் கொண்டாட சொந்த ஊர் சென்றவர்கள் இந்த பஸ்ஸில் பயணித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## மாறுபட்ட COVID தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டால் உடலில் பிறபொருளெதிரிகள் அதிகரிக்கும்: ஆய்வில் தகவல்

மாறுபட்ட COVID தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வது உடலில் அதிகளவான பிறபொருளெதிரிகளை (Antibodies) உருவாக்குவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரே வகையான தடுப்பூசியை ஊக்கி (Booster) எனப்படும் மூன்றாவது தடுப்பூசியாக ஏற்றுவதால் உருவாகும் பிறபொருளெதிரிகளை விட அதிகளவானவை வெவ்வேறு தடுப்பூசிகளை ஏற்றுவதால் கிடைப்பதாக அமெரிக்க அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு, மிக நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஆய்வின் ஆரம்பகட்ட முடிவுகளில் தெரியவந்துள்ளது.

ஊக்கி தடுப்பூசியாக, ஆரம்பத்தில் ஏற்றிக்கொண்ட தடுப்பூசிக்கு மாற்றாக வேறொன்றை ஏற்றுவதனால் கிடைக்கும் செயற்றிறனை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. 450-க்கும் அதிகமானவர்களை பயன்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நடந்து வரும் இந்த ஆய்வின் முடிவுகள் இன்னும் மதிப்பாய்வு செய்யப்பட்டு மருத்துவ இதழில் வெளியிடப்படவில்லை. ஆய்வைப் பற்றிய கூடுதல் விவரங்கள் வெள்ளிக்கிழமை குனுயு ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு சோதனையை நடத்தும் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆரம்ப கண்டுபிடிப்புகள் குறித்து விளக்கங்களை வழங்க திட்டமிட்டுள்ளனர்.

## பெய்ரூட் துப்பாக்கி சூடு: ஆறு பேர் உயிரிழப்பு!

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடந்த போராட்டத்தில், நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 6 பேர் உயிரிழந்ததோடு 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக லெபனான் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

பெய்ரூட் நகரின் துறைமுகத்தில் கடந்த ஆண்டு நடந்த மிகப்பெரிய வெடிப்பு சம்பவத்தை, விசாரித்த நீதிபதிக்கு எதிராக ஷியா முஸ்லிம் குழுக்கள் அன்று (வியாழக்கிழமை) நடத்திய போராட்டத்தின் போதே இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. அதே நேரத்தில் நான்கு பி 7 ரொக்கெட்டுகள் வீசப்பட்டன.

இந்தநிலையில், துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு ஒரு நாள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா மற்றும் அதன் முக்கிய ஷியா கூட்டாளியான அமல் ஆகியோரின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள், லெபனான் தலைநகரின் நீதி அரண்மனை நோக்கி அணிவகுத்துச் சென்றபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கூரையில் இருந்தவர்கள் துப்பாக்கி சூடு நடத்தினர்.

ஹிஸ்புல்லா குழுவினர், ஒரு கிறிஸ்தவ பிரிவை குற்றம் சாட்டினார்கள். இருப்பினும் அந்தக் குழு குற்றச்சாட்டை மறுக்கிறது.

வன்முறையைத் தொடர்ந்து ஒன்பது பேர் கைது செய்யப்பட்டதாக லெபனான் இராணுவம் வியாழக்கிழமை பிற்பகுதியில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.



## பெண்களுக் கெதிரான வன்முறையினை விழிப்பூட்டும் "இல்லத்து வழக்காடு" நூல் வெளியிடப்பட்டது !

ஆசிய நிலையத்தின் அனுசரணையுடன் GAFSO நிறுவனத்தால் அமுல்படுத்தப்படும் பெண்களுக் கெதிரான வன்முறையினை இல்லாமல் செய்யும் வேலைத்திட்டத்தின்கீழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு அங்கமாக "இல்லத்து வழக்காடு" எனும் தலைப்பில் வெளியீட்டாளரும்,

திட்டபணிப்பாளருமான ஏ.ஜெ. காமில் இம்டாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தக வெளியீடு காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று இடம் பெற்றது .

இந் நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புத்தகத்தை வெளியீட்டு வைத்தார்.

மேலும் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ் பாத்தீபன், கணக்காளர் ஜயசர்மிகா, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேக்கா எதிரிசிங்க, காரைதீவு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிட்டா உட்பட மாதர் அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் .










## புத்தக வாசிப்பு பரிசளிக்கும் 8 ஆரோக்கியப் பலன்கள்!

புத்தக வாசிப்பு, நம் மனதை எழுச்சிகொள்ளச் செய்ய தூண்டும்

மனஅழுத்தம் குறைக்கும்!

விரியும் அறிவு : நாம் வாசிக்கிற எல்லாமே தகவல்களாக நம் மனதில் பதிபவைதான். இது ஒரு வகை அறிவு.

சொல் வளம் பெருகும்!

நினைவுத்திறனை மேம்படுத்தும்!

மன அமைதிக்கு உதவும்!

பொழுதை பயனுள்ளதாக்கலாம்!

அறிவைக் கூர்மையாக்கும்!



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 17.10.2021 அன்று வெளியிடப்பட்டது.